த. சண்முகசுந்தரம்

# மீட்சி

நவீனம்

# மீனாட்சி

நவீனம்

SITHY VINAYAGAR
EAR ALAI WEST
CHUNNAKAM
LIBRARY

த. சண்முகசுந்தரம்

※

※

கலியுகம் 5076 ஆனந்த ஆண்டு சித்திரைத் திங்கள்

24 - 4 - 1974

※

வெளியீடு: கலைப்பெரு மன்றம், அம்பனை, தெல்லிப்பழை

எல்லா உரிமையும் ஆக்கியோனுக்கே

விலை: ரூபா 2 - 00

குகன் அச்சகம், தெல்லிப்பழை

SITHY VINAYAGAR
LIBRARY

# பதிப்புரை

ஆசிரியரின் நூலுக்கு மாணாக்கர் பாயிரம் செய்யும் முறை தமிழ் மரபில் தொன்றுதொட்டு வழங்கி வருவது. பதிப்புரையாக நாம் எழுதும் இப்பகுதி ஒரு வகையிற் பாயிரமேயாகும். மாணவராக இருந்த காலத்தின் பின்னர் நாட்டின் இலக்கியப் போக்குகளுடன் எம்மைத் தவிர்க்கமுடியாது பிணித்துக்கொள்ளும் நிலை ஏற்பட்டது. மாணவநிலை மாறிப் பல்வேறு விடயங்களையும் நிதானமாகவும், தெளிவாகவும் நோக்க முற்பட்ட காலங்களில் திரு. த. சண்முகசுந்தரத்தைச் சந்திக்குந்தோறும், அளவளாவுந்தோறும் எமது மனதிற் பதியவிட்ட சிந்தனைத் துளிகள், பதிப்புரை எழுதும் உணர்வுக்குப் புறம்பாகத் துருத்திக்கொண்டு நிற்கின்றன.

பல்கலைக்கழக மாணவராக விளங்கிய காலம் முதல் ஆக்க இலக்கிய வேகத்துடன் இயங்கிவரும் திரு. த. சண்முகசுந்தரம், பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்க ஏடாகிய 'இளங்கதிரின்' முதலாவது ஆசிரியர். இந்த ஆர்வமும், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் பெரும் ஆதரவும், சிந்தனைப் பின்னணியும் ஊட்டிய வேகம் பத்திரிகைப் பணிக்கு இவரை இட்டுச்சென்றது. இவர் 'தினகரன்' ஆசிரியர் குழுவில் ஏறக்குறைய மூன்றாண்டுகாலம் கடமையாற்றினார். இக் காலகட்டத்

தில் மலர்ந்தவையே இவரது ஆசை ஏணி, மீனாட்சி என்ற நாவல்கள்.

ஏகாதிபத்திய சக்திகளாலும் முதலாளி வர்க்கத்தாலும் தலைமை தாங்கப்பட்ட நிறுவனத்திற் கடமை ஆற்றிய காலத்திலும் பழைய சுரண்டல் சமுதாய அமைப்பை உடைக்கவேண்டும் என்ற உள்ளுணர்வு வேகத்துடன் செயலாற்றினார். அவ்வப்போது எழுதிய சிறுகதைகள் இதனைத் தெளிவாக உணர்த்துகின்றன, ஏறத்தாழ 1950ஆம் ஆண்டின் பின்னர் 1956 வரை ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் பொதுவாகச் சமுதாய அமைப்பைக் கண்டிப்பதிலும், அம்பலப்படுத்துவதிலும் வெற்றிகாண முனைந்தனரே தவிரச் சமுதாய அமைப்பை மாற்றும் சரியான வழியை இனங்காண வில்லை. உண்மையில் திரு. த. ச. வின் நாவல் முயற்சிகள் இக் காலத்திலேயே ஏற்பட்டன. குறிப்பாக மீனாட்சியில் மாறும் சமுதாயத்தை அவாவும் வேகத்தையும் வாழும் சமுதாயத்தைத் திறனாய்வு நோக்குடன் அவதானித்த போக்கையுங் காணலாம்.

பத்திரிகைப் பணியின் பின்னணியிலான நேர்மையற்ற போக்குகளிற் தன்னைப் பலியிட்டுக்கொள்ள விரும்பாத திரு. த. ச. அமைதியாகக் கல்விப் பணி புரியும் நோக்கோடு மகாஜனக் கல்லூரிக்கு ஆசிரியராக வந்தார். இக் காலகட்டத்தில் கூடுதலாக நாடகத் துறையிற் கவனஞ் செலுத்தினார். அமைதியும், ஓய்வும் நிறைந்த ஆசிரியப்பணியிற் பிறந்ததே இவரது சாகித்தியமண்டலப் பரிசுபெற்ற வாழ்வுபெற்ற வல்லி, பூதத்தம்பி, இறுதிமூச்சு ஆகிய நாடகங்கள். இவை யாவும் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் பணிகளைத் தொடரும் நல்ல மாணவ இதயத்தையே மனங்கொள்ள வைக்கின்றன.

தினகரனில் வெளிவந்த தமது 'குலமகன்' என்ற நாடகத்தைக் கல்லூரி மாணவர்களைக்கொண்டு மேடை

ஏற்றினர். சமூக ஏற்றத்தாழ்வைச் சாடும் இந் நாடகம் அக்காலத்திய சமுதாய மாற்றச் சிந்தனை வேகத்தின் பிரதிபலிப்பாக அமைந்தது.

மேலும், இவரின் அச்சேருத படைப்புக்கள் பல உள்ளன. 'நான் யார்' என்ற நாடகம் மரண விசாரணைக்கு உதவியாக இருந்த சுத்திகரிப்புத் தொழிலாளியை நாடகத் தலைவனுகக் கொண்டது. இது இலங்கை வானெலியில் இடம்பெற்றது.

அமரர் துரையப்பாபிள்ளையின் வாழ்க்கை வரலாற்றை வைத்து எழுதப்பெற்றது 'அறிவு கொளுத்திய அமரன்' என்ற நாடகம். 1972இல் அவரின் பிறந்த நூற்றுண்டு விழாவின்போது இது மகாஜனக் கல்லூரி ஆசிரியர் குழாத்திஞல் இரண்டுமுறை மேடை ஏற்றப்பட்டது. இளைப்பாறிய ஆசிரியர் இளையதம்பியின் நைந்த வாழ்க்கையையும் உறுதியான இலட்சியத்தையும் பிரதிபலிப்பது, 'இளைப்பாறினர் இளையதம்பி' என்ற நாடகம். நாகசுரக் கலைஞனின் கலைப் பித்தையும், காதலையும், அவனின் வாழ்க்கை மேடு பள்ளங்களையும் எடுத்துக்கூறும் நவீனம் 'விதியின் கை'. சிறுகதைத் தொகுப்பு 'எதிரொலி' உண்மையில் சமுதாயத்தின் எதிரொலி எனலாம். திண்ணைப்பள்ளி மரபை எடுத்து விளக்கும் முயற்சி 'கல்வியும் மரபும்' என்ற கட்டுரைத் தொகுப்பு. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் வாழ்க்கையைப்பற்றிக் கூறுவது 'கலையருவி கணபதிப்பிள்ளை' என்ற நூல். வெளிவராத இந்தப் பிரதிகள் யாவும் திரு. த. ச. வின் எண்ணங்களைப் பிரதிபலிக்கின்றன.

பத்திரிகைப் பணிக்குப் பின்னர் நீண்டகாலம் இலக்கிய உலகில் அஞ்ஞாதவாசம் புரிந்த த. ச. அண்மைக் காலத்தில் முழுமுனைப்போடு பணிபுரிந்து வருகிருர். கலைக்கண்ணில் எழுதும் அறிமுகக் கட்டுரைகள், வானெலியில் ஆற்றிய உரைகள், சிறுகதைகள்

யாவும் சமுதாய மாற்றத்தையுந் தேவையையுங் காட்டுவனவாகும்.

"புதுச் சமுதாயம் மலரவேண்டும்; எம்போன்றவர்கள் வாழ இந்த உலகில் இடம் தேவை; அந்த நிலை இன்று இல்லாவிட்டாலும் என்ருே ஒருநாள் வந்துதிரும்" என்ற நம்பிக்கை மலர்ச்சியை, 'மீனுட்சி' என்ற பாத்திர வாயிலாக இந் நாவலில் இலேசாகக் கோடிட்டுக் காட்டியுள்ள திரு. த. ச. வின் ஆக்க இலக்கிய முயற்சி, ஈழத்து இலக்கிய வளர்ச்சியிலே குறிப்பிட்டு நோக்கவேண்டிய ஒன்ருகும்.

ஏறத்தாழ 1953ஆம் 1954ஆம் ஆண்டுவரையிலே 'ஆசை ஏணி' என்ற நீண்ட தொடர்நாவலையும், 'மீனுட்சி' என்ற நாவலையும் சுதந்திரன் பத்திரிகையில் எழுதினுர். 'மீனுட்சி' என்ற நாவலில் ஒரு தோட்டத் தொழிலாளிப் பெண்ணின் சோதனை நிறைந்த வாழ்க்கை மென்மையாக வடிக்கப்பட்டுள்ளது. அபலைப்பெண்களின் வாழ்க்கையில் துன்பமும், ஏக்கமும், நம்பிக்கை வரட்சியும் நிறைந்துள்ளன என்ற உண்மை அழுத்தி உரைக்கப்படுகிறது. தொழிலாளி வயிற்றிற் பிறந்த மீனுட்சி வாழ்க்கைப் போராட்டத்தில் தறிகெட்டு இதயக் கனவுகளைத் தன்னுள்ளே புதைத்துச் சமுதாய ஏக்கங்களின் நுண்ணிய வெட்டுமுகத் தோற்றத்தை இலேசாகப் பிரதிபலிக்கின்ருள். ஏழைகள் வாழ்வு கண்ணீரில் நிறைந்திருந்தாலும், துளிர்விடும் நல்லிதயங் கொண்டவர்கள் என்பதை ஆசிரியர் உணர்த்துகின்ருர். ஏழைகளைத் தொடர்ந்து துன்பம் அனுபவிக்க வைத்த சமுதாய அமைப்பை இந் நாவல் முகவுரையிற் சாடும் ஆசிரியர், சமுதாயத்தின் மனச்சாட்சியாக் விளங்க முயன்றுள்ளார்.

நாகராஜனின் இதயத்தைப் புரிந்துகொள்ளாத கருவாட்டு முதலாளி வேலுப்பிள்ளை ஒரு சமூகப் பிரதிநிதித்துவப் பாத்திரமாகும்.

"நிறைய வயல்களும் வங்கியிற் காசும் இருக்கின்றன. உன் பெருஞ் செல்வத்தோடு இந்தச் சொத்தும் சேரப்போகின்றது. செல்வத்தோடு செல்வம்........" எனப் பேசும் வார்த்தைகள் உண்மையில் முதலாளி மனோபாவத்தையும், உறவு முறையைப் பந்தப்படுத்திச் சொத்துரிமையைப் பலப்படுத்தும் எமது நாட்டுத் திருமண நோக்கையுங் காட்டுகின்றன. இவை மனங்களின் பிணைப்பல்ல, பணங்களின் பிணைப்பே திருமணம் என்பதைப் பூடகமாக உணர்த்துகின்றன.

அண்மையில் வெளிவந்த 'கலையும் மரபும்' என்ற நூலைத் தொடர்ந்து 'மீனாட்சி' என்ற நாவல் வெளிவருகின்றது. இதனை வெளியிட்டு வைக்கும் பணியில் கலைப்பெரு மன்றம் பூரண ஆதரவை நல்கியுள்ளது.

பதிப்புரையில் நீளமாக ஏதேதோவெல்லாம் கூறி நந்தியாக நிற்க விரும்பவில்லை. நாவல் எழுதப்பட்டு இருபது ஆண்டுகளின் பின்னரே நூலுருவில் வெளிவருகின்றது. காலம் வேகமாக ஓடுகிறது. வாழ்க்கையும் உணர்வுகளும் விரிந்து செல்கின்றன. நிகழ்காலச் சமூகம் இந்த நாவலை நின்று நிதானித்து நோக்குவது நல்லது. ஆசிரியரது பலம் - பலவீனங்களுக்குப் புறம்பாக இந் நாவல் சமூகத் தேவையைப் பூடகமாகக் குறியிட்டுக் காட்டும் ஒரு முயற்சி. மீனாட்சி போன்ற பலருடைய வாழ்க்கைக்குத் தீர்வுகாண முயன்று தாழ்வற்ற ஒப்பில்லாச் சமுதாயத்தைக் காணவேண்டும். இது எமது ஆவல். ஆசிரியரது ஆவலுங்கூட. இந் நாவல் தமிழ்கூறும் நல்லுலகில் நல்ல வரவேற்பைப் பெறும் என்பது எமது நம்பிக்கை.

கலைப்பெரு மன்றம்,
அம்பனை,
தெல்லிப்பழை.
1 - 5 - 1974

ஆ. சிவநேசச்செல்வன்
புலவர் ம. பார்வதிநாதசிவம்

# முன்னுரை

சமதரும ஆட்சி நிலவுகின்ற நாடு ஒன்றிலே எமது நாட்டவர் ஒருவர் புகைவண்டியிற் பிரயாணஞ் செய்தார். சிற்றுண்டிச் சாலைக்கு அவர் சென்று மிடுக்காக, ''எனக்கும் எனது வேலைக்காரனுக்கும் உணவு'', எனக் கட்டளை பிறப்பித்தார். ''இந்த நாட்டில் வேலைக்காரர் உணவு என்று ஒன்றில்லை; வேண்டுமானுல் இரண்டுபேருக்கு உணவு தரலாம்'', என்ருர் சிற்றுண்டிச்சாலைப் பொறுப்பாளர். பாக்குவெட்டி நறுக்குவது போல இருந்தது அவரின் மறுமொழி. அந்த நாட்டில் வேலைக்காரர் நிலை அப்படி. எமது நாட்டில் வீட்டு வேலைக்காரர் நிலை எப்படி? முழு மிருகங்களாகவே அவர்கள் வாழ்கின்றனர். அரை மிருகங்கள் என்ற நிலைக்குக்கூட அவர்களால் உயர முடியவில்லை.

நான் கற்கும்போது, அயலில் வயதுபோன 'ஆயா' ஒருவர் இருந்தார். அவருக்குத் திருமணம் நடக்கவில்லை. ஒன்றிக்கட்டை. நான் பார்க்கும்போது அவர் பட்டகட்டையாகிவிட்டார். முதுமை ஒருபக்கம்; வறுமை ஒரு பக்கம். உடல் மெலிவு, உள்ளச் சோர்வு, தள்ளாடும் நடை, கந்தை உடை, நரம்புத் தளர்ச்சி, பார்வையில் ஏக்கம்; இருந்தும் சொல்லமுடியாத ஒரு வகைக் கவர்ச்சி...... தோற்றம் இப்படித்தான். நரம்புத் தளர்ச்சி காரணமாக அலட்டுவார். பின்னர் நாட்

கணக்காகப் பேச்சுமூச்சின்றி இருப்பார். இந்தக் காட்சியில் ''மீனாட்சி'' உருவாகினர். இவரை யார் உருவாக்கினர்கள்? இவர் முன்னர் வேலை பார்த்த வீட்டார் அத்தனை பேருமோ? இல்லை. இவரை உருவாக்கியது எமது சமுதாயம். நன்ருக உண்டு உடுத்து அணிந்து பவனி வருகின்ற சமுதாய முன்னணிச் செல்வப்பெண் சித்திரம். அந்தச் சித்திரத்தில் வடிவு உண்டு; வஞ்சனை உண்டு; வாயாடிக் குணம் உண்டு; ஆனுல், கேலிச் சித்திரம் இந்த 'ஆயா'. அழகான சித்திரத்திலும் பார்க்கக் கேலிச் சித்திரம் மக்களின் கண்களைத் திறக்கவைக்கும். இது உண்மை. இந்த 'மீனாட்சி' எனது கண்களைத் திறக்கச் செய்தார். சமுதாயத்தின் கண்களைத் திறக்கட்டும் என இதனைக் கதையாக எழுதினேன். இப்பொழுது நூலாக அச்சேற்றுகிறேன்.

இக் கதை, 1953ஆம் ஆண்டில் ''சுதந்திரனில்'' வெளிவந்தது. என்னைப் பெருமைப்படுத்தி இதனை வெளியிட்ட இந்த நிறுவனத்தாருக்கு என் உளப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இதனை அச்சேற்றுவித்தற்கு ஊக்கந் தந்தவர்கள் இருவர். நண்பன் அளவெட்டியூர்க் கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை ஒருவர். மற்றவர் 'தமிழ்த்தேனீ' அம்பனை திரு. ஆ. சிவநேசச்செல்வன். பொதுவாக எனது கருத்துக்களுக்குப் பலத்த ''சோதனை'' ஏற்படுத்துபவர் இனிய நண்பர் தொல்புரக்கிழார் புலவர் நா. சிவபாதசுந்தரம். இவர்களுக்கு என் அன்பு கனிந்த நன்றி. எனது வலக்கை, சிந்தனைக் கொழுந்து புலவர் ம. பார்வதிநாதசிவம். நான் கேளாமலே உதவுபவர் மயிலங்கூடலூர்க் கவிஞர் பி. நாடராசன். இவ்விருவருக்கும் நான் பெரிதுங் கடமைப்படுள்ளேன். இக் கதையை வெளியிடுவதற்குப் பக்கபலமாக இருந்தவர் ''ஈழத்துச் சோமு'' என்ற புனைபெயரில் மறைந்துள்ள நண்பன் நா. சோமகாந்தன். இவர் அளித்த உதவிக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

என் பணிக்கு உதவுவது தெல்லிப்பழை குகன் அச்சகம். இங்கு பணிபுரிபவர்கள் எல்லோரும் எனக்கு வேண்டியவர்கள். இவர்களுடைய உழைப்பு இந்த நூல் உருவாவதற்குத் துணையாகியது.

கந்தசுவாமி கோவிலடி,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.
4-6-1974

த. சண்முகசுந்தரம்

# முதற் சந்திப்பு

எனக்குப் பிள்ளையார் கோவிலுக்குப் போக விருப்பம். அதிலும் பிள்ளையாரின் கருங்கல்லுச் சிலையைப் பார்ப்பனர் குடத்திலுள்ள நீரைச் சொரிந்து நீராட்டுவதைக் காணுவதில் ஒரு தனி மகிழ்ச்சி. பார்ப்பனர் ''சலசல'' என ஊற்றும் நீரெல்லாம் தெறித்துத் துளி துளியாகப் பாயும். விளக்கொளியில் அத்துளிகள் ''பள பள'' என மின்னும். எத்தனையோ விதமாகத் தன்னை வழிபடுபவர்களுக்கு அருள் அளிப்பார் பிள்ளையார்; ஆனால், எனக்கு அவர் அருளாவிட்டாலும் இந்த நீராட்டல்மூலம் ஒரு பாடம் படிப்பித்தார். 'கல்லுப்பிள்ளையாருக்கு எவ்வளவுதான் நீராட்டினாலும் உள்ளுக்கு ஒரு சொட்டுத் தண்ணீரும் செறியாது' என்பதைப் பிள்ளையாரின் சிலை எனக்குக் கூறுமற் கூறியது. என்னுடைய உள்ளும் ஒரு விதத்திற் கல்லுப்பிள்ளையாரைப் போலப் பல ஆண்டுகளாக இருந்தது. இந்த நிலவுலக வாழ்வில் நான் உள்ளும் புறமும் தோய்ந்திருப்பதாக என்னைக் காண்பவர் கருதினர்; ஆனால், எந்த நிகழ்ச்சியும் என் உள்ளத்தை ஊடுருவியது கிடையாது. கல்லுப் பிள்ளையாரைப்போலவே என் உள்ளமும் இருந்தது. இளம் வயதுதானே! பளிங்கினாற் செய்த பொய்க் கண் எதனையும் காணமுடியாது இருந்தபோதிலும், இலங்கிக்கொண்டிருப்பதுபோல, என் உள்ளமும் இலங்கியது. பளிங்கிலிருந்து ஒளி பாய்வதுபோல என் உள்

ளத்திலிருந்தும் ஒருவித மிருக உணர்ச்சி வீசியது. எனினும் நான் கெட்ட பழக்கவழக்கங்களில் இறங்காதது எல்லாருக்கும் வியப்பாக இருந்தது. மதுவையும், பெண்களையும் நான் நாடியதில்லை. குதிரைச்சவாரி, மலையில் ஏறுதல், குத்துச் சண்டை, மற்போர் இப்படியானவைகளில் ஈடுபட்டுப் பொழுதுபோக்கி ஒருவிதமான முரட்டு இன்பத்தை நான் பெற்றுவந்தேன். காதல் என்பது, எவர்மீதும் கொள்ளும் அன்பு எனக் கொண்டால், நான் கொண்டதும் ஒருவிதத்திற் காதல்; வேறொரு விதத்தில் அது காமம். காதலுக்கும், அன்புக்கும் வேற்றுமை உண்டென்பர், இல்லையென்பர்; ஆனால், பெண்கள்மீது எனக்கு இரண்டும் பிறக்கவில்லை அப்பொழுது.

அவளின் பெயர் அலிசு. எமது கீழைத்தேய உடலமைப்பும், முகவெட்டும் இருந்தபோதும் அவளுக்கு மேல்நாட்டுப் பெயர் இருந்தது. மாந்துளிர் போல இருந்தாள். மிகவும் அழகான முகம். கண்ணில் நல்ல ஒளி இருந்தது. கண் விழிகள் சற்றுப் பெருத்துச் சீவிய நுங்குக் கண்போல இருந்தன. மூக்குநுனி சற்று வளைந்து இருந்தது. அதுவும் அவளுக்குத் தனி அழகை அளித்தது. நெற்றியில் ஏதோ வெட்டுக்காயம் இருந்தது. அதற்கு யாரோ ஒரு வைத்தியர் இழைப்பிடித்து வைத்தியஞ் செய்திருந்தார். அவருக்கு அவ்வித வைத்தியத்தில் திறமை இல்லை என்பது அவள் நெற்றியைப் பார்த்ததும் தெரிந்தது. வெட்டுக்காயத்தை முறையாகத் தையாதபடியால் அது மேடும் பள்ளமுமாக இருந்தது. அக் காயம் அவளின் அழகைக் கெடுத்தது என்பதில் ஐயமில்லை. அழகாக உடையணிந்திருந்தாலும் அவள் ஏழையாக இருக்கலாம். எனவே, காயம் ஏற்பட்டபோது சிறந்த வைத்தியரிடம் அவள் போகவில்லைப்போலும். வைத்தியர்கள் பணம் பிடுங்குபவர்கள்தானே! பாம்பு நஞ்சைக் கக்கும்; வைத்தியர்கள் பணம் எனும் நஞ்சை உறிஞ்சுவார்கள்.

இப்படியாக ஒரு பெண்ணை மட்டிட்டு அறிய ஒரு போதும் நான் நின்றதில்லை. நகரிலுள்ள ஒரு ஒழுங்கை முடக்கில் வழக்கம்போல விரைந்து நடந்து சென்றேன். அப்பெண் என்மேல் வந்து எதிர்பாராத விதமாக அடிபட்டுக்கொண்டாள். என்னுடைய பருத்த முரட்டு உடம்பிலே மோதியதால் அவளுக்குத்தான் நோ ஏற்பட்டிருக்கும். சற்றே பயந்தவளாகப் பின்னுக்கு இரு அடிகளை எடுத்து வைத்துக் கன்னம் குழியச் சிரித்துக்கொண்டு, " மன்னிக்கவேண்டும்" என்றாள்.

" ஒன்றுமில்லை; தற்செயலாக நடந்ததுதானே ?" என்றேன்.

" உங்கள் குரலிலேதான் என்ன பொறுமை. வேறு யாருமாக இருந்தால் 'நாயே, குறிப்புணர்த்த வந்தாயோ?' என என்னை ஏசியிருப்பார்கள்" என்றாள்.

" அப்படியென்றால்......?" என்றேன்.

என்னுடைய கேள்வி அவளைச் சம்மட்டியால் அடித்ததுபோல இருந்தது. நகக்கண்ணில் ஊசி ஏறியது போலப் பதைபதைத்தாள் அம் மங்கை.

"பெரியகதை அது. நான் இப்போது யாருந் துணையற்றவள்; ஏழை. என்னுடன் நீங்கள் பேசுவதைக் கண்டாலும் உங்களை மாந்தர் குறை கூறும் நிலை ஏற்படும். ஐயா, எனக்கு ஒரு உதவி செய்வீர்களோ?" என்றாள்.

"என்ன என்று சொல் பார்க்கலாம்" என்றேன்.

" எனக்கு வேலை செய்ய உடலில் வலிமை இருக்கின்றது. யர்ரும் வேலை தரார்களாம்" என்றாள்.

"ஓ ! அதுவோ? ஒருநாளைக்கு வா. என்ன செய்யலாம் எனப் பார்ப்போம்" என்று சொல்லி என்னுடைய முகவரி பொறித்த கடுதாசிச் சிற்றேடு ஒன்றைச் சட்டை மடியிலிருந்து எடுத்து அவளிடம் கொடுத்தேன்.

# அறிமுக ஓலை

என்னுடைய முரட்டுப் பொழுதுபோக்கில் ஒரு கிழமை மறைந்துவிட்டது. புதிய புகைப்படப் பெட்டி ஒன்றை வாங்கிக்கொண்டு மலையடிவாரம் சென்றேன். பலவிதமான அழகிய காட்சிகளைப் படம் பிடித்தேன். இதற்கிடையில் துப்பாக்கி சுடவும், வேட்டையாடவும் பழகினேன். அதிலும் நன்கு முன்னேறினேன். வேட்டைக்கு உதவியாக மேல்நாட்டு வேட்டைநாய் ஒன்றை விலைகொடுத்து வாங்கினேன். கிழக்கு நாட்டவர் தங்களுக்கு மேல்நாட்டுப் பெயரை வைத்தால், மேல்நாட்டு நாய்க்கு ஏன் கிழக்கு நாட்டுப் பெயரை வைக்கப்படாது? எனவே, என் நாய்க்கு ''வீரன்'' எனப் பெயரிட்டேன். ''வீரா! வீரா!'' என அந்த நாயுடன் நான் ஒருநாள் செல்லம் கொஞ்சிக்கொண்டிருக்கும்பொழுது பணியாள் வந்து, யாரோ வெளியே வந்திருப்பதாகத் தெரிவிக்கவே, வெளியே சென்றேன். அதே பெண் வந்திருந்தாள்.

''நான் அதனை மறந்துவிட்டேன். இரண்டுநாள் செல்ல வா'' என்றேன். அவளும் வணக்கம் தெரிவித்துவிட்டுச் சென்றாள்.

அந்த இரண்டு நாளும் அங்கும் இங்கும் அலைந்து திரிந்து அவளுக்கு மூன்று வேலை தேடினேன். மூன்று

வது வேலையைப்பற்றி ஒருவரிடம் பேசிய பின்னர் வீட்டிற்கு வந்தேன். இரண்டு நாளும் வேட்டைக்கு அழைத்துச் செல்லாதபடியால், கட்டிலிருந்த என் நாய் ''வாள், வாள்'' எனக் கத்தும் ஒலி தூரத்தில் வரும்பொழுதே என் காதில் விழுந்தது. நான் வீட்டினுள் செல்லும்போது அப்பெண் தலைவாயிலில் இருந்தாள். என்னைக் கண்டதும் மரியாதையாக எழுந்து நின்றாள்.

'' உன் அலுவலாகத்தான் வெளியே போனேன். மூன்று வேலைகள் இருக்கின்றன. ஒன்று சிறு பிள்ளையைப் பார்க்கும் தாதி வேலை. நல்ல குடும்பம். சம்பளம் நன்கு தருவார்கள். அன்பாக நடாத்துவார்கள்'' என்று சொல்லிவிட்டு அவளை நிமிர்ந்து பார்த்தேன்.

அவளுடைய நெற்றி வியர்த்திருந்தது. முகம் வெளிறியது.

'' நீ அதனை விரும்பவில்லையோ? '' எனக் கேட்டேன்.

''ஓம்'' என்பதைக் குறிக்க அப்பெண் தலையசைத்தாள்.

'' மருத்துவத் தாதி ஒருவருக்கு ஒரு உதவியாள் வேண்டுமாம். அதனை ஏற்றுக்கொள். நல்ல சம்பளம் கிடைக்கும். நிரந்தரமான வேலை '' என்றேன்.

'' வேண்டாம்! வேண்டாம்!'' என்ற இரட்டித்த மறுப்பு மறுமொழி வந்தது.

வேலையில்லாது திண்டாட்டப்படும் பெண் என்றபடியால் உதவியளிக்கலாம் என இப் பாடுபட்ட முயற்சியை அவள் வேண்டாமெனக் கூறுவதைக் கேட்டு என் உள்ளம் சீற்றமடைந்தது. சற்றுக் கடுகடுப்பாக, '' கருவாடு காயவைப்பதை நாள் முழுவதும் பார்க்க

ஓர் ஆள் வேண்டும். தொல்லையான வேலை அது. கருவாட்டு மணமும் மூக்கை அழுகச் செய்யும்'' என்றேன்.

''பரவாயில்லை, அதனை ஏற்கின்றேன்'' என மெல்ல மறுமொழி வந்தது.

''இதுவும் விந்தைப் பிறவி! நல்ல வேலைகளை வேண்டாமென்கிறதே; நமக்கு என்ன?'' என எண்ணினேன். வேலைக்கு இப் பெண்ணை எடுப்பவருக்கு ஓர் அறிமுக இதழ் எழுதி அவள் கையிற் கொடுத்தேன். முன்பின் அறியாதவளைப் புறம்பான இடத்திற்கு அனுப்புகின்றேன் என்பதை நினைக்க உள்ளத்தில் ஐயப்பாடு தோன்றியது. இவள் அங்கு களவெடுத்தால் நானல்லவோ பொறுப்பு என்னும் கேள்வியும் எழுந்தது. வருவது வரட்டுமென எண்ணி ஓர் அறிமுக ஓலையைக் கொடுத்தனுப்பினேன்.

# அழகு வெறி

நாட்கள் பல உருண்டோடிவிட்டன. நானும் இப்பொழுது துப்பாக்கி சுடுவதிற் கெட்டிக்காரனாகி விட்டேன். ஐந்து ஆறு மாதங்களில் பூரு வேட்டை, மான் வேட்டை, பன்றி வேட்டை, கரடி வேட்டை, யானை வேட்டை, புலி வேட்டை என முன்னேறினேன். ஒருநாள் ஒரு புலியைச் சுட்டு அதன் தோலை உரித்து எடுத்துக்கொண்டு வேட்டை அலுப்புடன் காட்டிலிருந்து வீடுவந்து சேர்ந்தேன். அப்பொழுது என்னை அன்புடன் வரவேற்க ஒருவரும் இல்லையே என்னும் துக்கம் ஒருவாறு என் உள்ளத்தில் தோன்றியது. நான் யார்மீதும் அன்பு காட்டினாலல்லவோ அவர்களும் என்மீது அன்பு காட்டுவார்கள் என உள்ளத்தைத் தேற்றிக்கொண்டு போனேன். நான் வீட்டிலில்லாதபோது நண்பர்களிடமிருந்து பல ஓலைகள் வந்து இருந்தன. அவற்றைப் பணியாள் என்முன் கொண்டுவந்து வைத்தான். நான் முதலில் எடுத்த ஓலையின் முகவரியை ஒரு பெண் எழுதியிருந்தாள். அது அப் பெண்ணாக இருக்குமோ என்று எண்ணி ஓலை உறையை எடுத்தேன். உள்ளிருந்தது ஒரு அழைப்பிதழ்.

"திரு. க. நாகரார்சன் அவர்களே,

திரு. க. வேலுப்பிள்ளையும், திருமதி வேலுப்பிள்ளையும் தங்கள் ஆண் குழந்தையின் பெயர் சூட்டுவிழா

விற்கு அன்புடன் அழைக்கின்றனர்.'' என அதில் பொறித்திருந்தது.

இவன் என்னுடைய பழைய நண்பன். கருவாடு ஏற்றுமதி இறக்குமதி வணிகம் நடாத்தி வருகின்ருன். இவனுடன்தான் அலிசு என்னும் அப் பெண் வேலேக்கு இருக்கிருள். அங்கு போனல் என் நண்பனும் என்னேக் கண்டு மகிழ்ச்சி அடைவான். அத்துடன் அலிசையும் காணலாம். ஓர் அம்பு எய்ய இரு குருவிகள் விழும். எனவே நான் அவ்விடம் வருவதாக ஓலே எழுதி அனுப்பினேன். ஒருநாள் நிற்கவோ அல்லது பலநாள் அங்கு நிற்கவோ என்பதைப்பற்றி முடிவு செய்ய இயலாத நிலேமையிலிருந்தேன். பெரிய தோற்பெட்டியில் உடுப்புகளே எடுத்து அடுக்குவதிலும், பின்னர் கைப்பெட்டி ஒன்றில் சில உடுப்புகளே மாற்றி அடுக்குவதிலும் நேரம் கழிந்தது. ஈற்றில் பெரிய பெட்டியுடன் உடுப்புக்களே எடுத்துச் சென்றேன். என் நண்பன் என்னே எதிர்கொண்டழைத்துத் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தான். தங்கச்சிலே போன்ற மனேவியும், வைரக்கல் என ஒளிக்கும் குழந்தையும் இருந்தார்கள் அவனுக்கு. பெண்கள் என்ருல் பொருட்படுத்தாத எனக்குக்கூட அவளுடைய அழகைக் கண்டு உள்ளத்தில் ஏதோ கெட்ட உணர்ச்சிகள் அறுகம் புற்கள்போல அடர்ந்து படர்ந்தன. உளத்தைக் கல்லாக்கிக் கட்டுப்படுத்திக்கொண்டிருந்தேன்.

குளித்துவிட்டு உச்சிவேளே உணவிற்கு என்னே ஆயத்தமாக இருக்கும்படி சொல்லிவிட்டு வேலுப்பிள்ளே போய்விட்டான். பின்னர் சாப்பாட்டு நேரத்திற்கு வந்தான். உச்சிவேளே உணவை அருந்தும் போது பலவற்றைப் பேசினேம். அலிசைப்பற்றிப் பேசும்போது என் நண்பனின் மனேவி கண்மணி, ''அவளே எங்குதான் பிடித்தீர்களோ?'' என்று கேட்டாள்.

என்னுடைய நெஞ்சு 'திக் திக்' என்று அடித்தது. சிலவேளை அலிசு கள்ளப்பெண்ணோ என்ற எண்ணம் எனக்கு வந்தது. என்னுடைய மனச்சோர்வை மாற்றும் படியான மறுமொழி என் நண்பனிடமிருந்து பிறந்தது.

"என்ன தங்கமான பெண். என்ன நேர்மை. அவள் வந்ததுமுதல் கருவாடு காயுமிடத்தில் களவில்லை. சுமார் எண்பது ஆட்களைக் கொண்டு நடத்தும் திறமை அவளிடமிருக்கின்றது. அவள் வந்தது முதல்மாதம் ஐந்நூறு ரூபா மேலதிகமாகக் கிடைத்தது. நீ அனுப்பிய ஆளென்ருற் சொல்லவும் வேண்டுமா?", என்ருன்.

நானும் விட்டுக்கொடுக்காமல், "ஓம் ஓம்," என்றேன்.

வேறு பலவற்றையும் பேசிக்கொண்டிருந்தோம். "அலிசு இப்பொழுது எங்களுடனே இங்கு இருக்கின்ருள். எனக்குத் துணையாக வைத்திருக்கின்றேன். தையல், பின்னல் வேலைகளிலும் கெட்டிக்காரி. நீங்கள் வந்திருப்பதாக அவளுக்கு அறிவித்தேன். வேலையிலிருந்து சீக்கிரம் வந்துவிடுவாள்", என்ருள் கண்மணி.

சாப்பாடு முடிந்தது. கண்மணியை இமை வெட்டாது நான் பார்த்தேன். முதன்முதலாகக் கண்மணியின் அழகு எனக்கு வெறியைத் தந்தது. இதன் காரணம் எனக்கே விளங்கவில்லை. சாப்பாட்டை அதிகம் உண்டதனுல் மயக்கம் ஏற்பட்டது. அழகு வெறித்தது. இரண்டும் சேரவே சற்றே காண்ணயர்ந்தேன். "தூங்காமற் தூங்கிச்சுகம்பெறுவ தெக்காலம்", என்பது போல அரை நித்திரையிலிருந்தேன். நான் வாயைத்திறந்து வைத்தபடி கண்மூடியிருப்பது எனக்கே தெரிந்தது.

"இதோ, அலிசு வந்திருக்கிருள்" என்று கண்மணி சொல்லிய குரல் கேட்டு நான் தலை நிமிர்ந்

தேன். கண்மணியின் அழகு வெறி மீண்டும் எனக்கு வந்தது. கண்மணியின் பக்கத்திலிருந்த ஒரு இளம் பெண் என்னைக் கவனித்துக்கொண்டிருந்தாள். அதனை நான் பார்த்தேன். அலிசு என்பக்கம் மிகவும் மரியாதையுடன் கைகூப்பி வந்தாள். உடல் நலத்தைப் பற்றி அவளை வினவினேன். கண்மணியின் அழகிலே தான் என் கண் ஓடிக்கொண்டிருந்தது. அது கண்மணிக்குத் தெரியாது.

கண்மணியின் பக்கத்திலிருந்த அப்பெண் என்னைப் பார்த்தாள். நானும் அவளை நன்கு பார்த்தேன்; ஆனால், கண்மணியைப் போன்ற அழகு அவளிடம் இல்லை. எனவே, நான் பின் அவளைப் பார்க்கவில்லை. அலிசு ஒருபுறத்தே இருந்து கொண்டு ஏதோ எல்லாம் சொன்னாள். நான் அவைகளிற் கவனஞ் செலுத்தவில்லை.

பிற்பகலும் வந்தது. என் ஆருயிர் அனைய நண்பனின் மனைவிமீது இப்படிப்பட்ட எண்ணம் வந்ததையிட்டு என்னையே நான் கடிந்து கொண்டேன். பெட்டியைத் தூக்கிக்கொண்டு உடனடியாக ஓடலாமோ என்ற எண்ணம் வந்தது. அப்படி ஓடினால் என் நண்பன் வருந்துவான். எனவே, அந்த எண்ணத்தைக் கைவிட்டேன். இந்த ஆத்திரமெல்லாம் தீர என் துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு வேட்டைக்குப் போனேன். என்னுடைய நாய் இல்லாதபடியால் என் உளம் ஒருமாதிரியாக இருந்தது.

என் நண்பனின் வீட்டிலிருந்து அரை மைல் தூரத்தில் கடற்கரை ஓரமாக உப்பங்கழி ஒன்று இருந்தது. அதில் நாரைகள் கொக்குகள் பல இருந்தன. என் ஆத்திரத்தில், அவைகளிற் பலவற்றைச் சுட்டுவீழ்த்தினேன். ஒரு நாரையைச் சுட்டதும் அது இறக்கையை அடித்துக்கொண்டு வீழ்ந்தது. அதைக் காண என் மனதில் ஏதோ செய்தது. அதன் இரத்தம் நீரிற் கலந்து

அந்திவானத்துச் சிவந்த மேகங்களைப் பிரதிபலிப்பதைப் போல இருந்தது. என்னுடைய கொடுந்தொழில் என்னையே வாட்டியது, எனக்கு உலகில் இருக்க இடமுண்டானல் அப் பறவைகளும் இருக்க இடமுண்டுதானே? வெறுப்புடன் துப்பாக்கியைத் தோளிற் போட்டுக்கொண்டு வீட்டிற்குப் போனேன். இருட்டாகியபடியால் விளக்கேற்றி விட்டார்கள். வீட்டு முன் பக்கத்தில் ஒரு விளக்கின் முன்பாக அலிசு ஏதோ ஊசியை வைத்துப் பின்னிக்கொண்டிருந்தாள். அவளிலும் ஏதோ ஒரு புதிய அழகைக் கண்டேன். என்னுடைய உள்ளத்தைக் கடிந்துகொண்டு உள்ளே சென்றேன். அங்கு கண்மணியின் எழில் என்னை எரித்தது. முன் பக்கத்திலுள்ள சாய்வு நாற்காலியில் "தடாரெ"ன்று வீழ்ந்தேன். களைப்பு மேலிட்டதனுற் கண்ணயர்ந்தேன்.

இரவு உணவிற்காக என் நண்பன் வந்து என்னை எழுப்பினன். எருத்துமாடு வைக்கோலை அதக்கிச் சப்புவது போல நானும் உணவை வாரி வாரி உண்டேன். என் பசியைப்பற்றி என் நண்பனுக்கு விளங்கவில்லை.

"சமையல் வேலை நன்ருக இருக்கின்றதோ? நல்லாக விழுங்குகின்ருய். 'சப் சப்' என்று பொச்சடிக்கின்ருய். சபைப் பழக்கம் இல்லை.", என்ருன் என் நண்பன். யாரோ "களுக்"கென்று சிரித்தார்கள். ஒருவேளை அந்தப் பெண்ணுக இருக்கலாம். 'என்ன அவமானம்' என எண்ணினேன். "நான் சாப்பிடுவதையும் அப் பெண் பார்த்திருந்தால்..." என எண்ணவே எனக்குக் கூடிய வெட்கமாக இருந்தது.

"தனியனுக இருந்து வாழ்ந்தது அப்படியே தெரிகின்றது. இவர் தாலி கட்டுகிறவளுக்கு நல்ல வேலை- இவரைத் திருத்தி எடுக்கவேண்டும்", என்ருள் என் நண்பனின் மனைவி. மீண்டும் "களுக்" கென அதே சிரிப்பொலி கேட்டது. பெண்கள் பொல்லாதவர்கள். ஆண்களை நையாண்டி செய்வது அவர்களின் வேலை. அவர்களுக்கு அதிலும் இன்பம் உண்டுபோலும்.

# காதல் மொட்டு

அலுப்பு, துன்பம், வெட்கம் இவைகளுடன் போய்ப் படுத்தேன். நித்திரை வரவில்லை. புத்தகங்களிற் காதலைப்பற்றிப் படித்துள்ளேன். அதுவும் எனக்கு ஏட்டுச் சுரைக்காய்போல இருந்தது. ஏதாவது ஒரு பெண்ணைக் காதலிக்க வேண்டும் என அப்பொழுது எனக்கு இருந்தது. எனது முரட்டுக் குணத்திற்கு ஏற்றவள் அலிசு என்னும் முடிவுக்கு வந்தேன். அவள் யார், எப்பேர்ப்பட்டவள் என்னும் எண்ணம் எனக்கு வரவில்லை.

அவளை அடைந்தாற் போதும் என எண்ணினேன். அவளை மணஞ் செய்யவேண்டும் என்னும் எண்ணம் வரவில்லை. இரவு கண்ணயராமலே இருந்தேன். இடையிடையே அலிசு என்பக்கத்தில் இருப்பதாகவும் எண்ணி ஏமார்ந்தேன். காலை ஐந்து மணியைக் குறிக்க மணிக்கூடு அடித்தது. நித்திரை வராதபடியால் எழுந்து வீட்டு முன்பக்கத்திற்கு வந்தேன். அங்கே அலிசு குனிந்து நின்று ஏதோ வேலை செய்தபடி இருந்தாள். குடுமி அவிழ்ந்து குலைந்திருந்தது. மெல்ல அடி வைத்து அவள் பக்கத்திற் சென்று அவளின் கையைப் பிடித்து அணைத்து முகத்தைத் தூக்கி முத்தமிட்டேன். ''படாரெ''ன என் கன்னத்தில் அடித்தாள் அவள். வேலை செய்கின்ற அவளுடைய கை மிகவும் முரடாக

இருந்தது. ஆத்திரம், அவமானம் எல்லாம் என்னிடம் தோன்றின. பிறரிடம் சொன்னாலும் வெட்கம்; கேவலம், தெருத் தெருவாகத் திரிந்த பெண் என்னை அவமானப் படுத்தியதாக எண்ணினேன். பழிக்குப் பழி வாங்க என் உளம் விரும்பியது. அவளை வேலையை விட்டுப் போகச் செய்யலாம் எனவும் எண்ணினேன். நான் சொன்னாலும் என் நண்பன் வேலையிலிருந்து நீக்கமாட்டான். அவனிடம் அவள் நல்ல பெயர் பெற்றுவிட்டாள். எலியிடம் கடிவாங்கிய பூனையைப் போல் நானும் கொதித்துக்கொண்டிருந்தேன்.

பொழுது விடிந்துவிட்டது. அலிசு வந்தாள். என் அறையைக் கூட்டினாள். காலையில் வந்த புதினத்தாளை மிகவும் மரியாதையாக இரண்டு கைகளாலும் தந்தாள். பின்னர் சுடச் சுடத் தேநீரும் கொண்டுவந்தாள். இதற்கிடையில் என் நண்பனும் எழுந்தான். நடந்தவற்றையெல்லாம் அலிசு சொல்லி விடுவாளோ என்ற பயம் என் உளத்தில் நிலவியது. அதனை நான் வெளிக்காட்டாமல் மிகவும் கெம்பீரமாக நடந்தேன். நான் அளவிற்கு மிஞ்சிய உசாராக நடந்ததும் ஒருவருக்கும் வியப்பைக் கொடுக்கவில்லை. அன்று அலிசு வீட்டிலே நின்றாள். அவளை என் நண்பன் முன்னிலையிற் கூப்பிடும்பொழுது ''அலிசு'' எனக் கடூரமாக நாக்குத் தறியக் கூப்பிட்டேன். அவளோ மிகவும் பணிவாக என்முன் வந்து நான் இட்ட வேலைகளை மரியாதையாகச் செய்தாள். அவள் நடந்துகொண்ட விதம் எனக்கே விந்தையாக இருந்தது. அதிலிருந்து அவள் என்னை மனமாரக் காதலிக்கின்றாள் என்பது வெளியாயிற்று. 'இதற்கு வேறு ஏதாவது சான்றும் வேண்டுமோ?' என எண்ணினேன். சில பெண்களிடம் காதல் புரியும்போது அவர்கள் முரடாக நடப்பார்களெனவும், அதற்கு ஆண்கள் பணிவாக நடந்தால் நற்பலன் கிடைக்குமெனவும் நான் ஏதோ மேல்நாட்டு அகநூற் புத்தகத்திற் படித்திருக்கின்றேன். அதனை நினைத்ததும் அலிசைத் தனியாகக் கண்டு அவளி

டம் என் நெஞ்சத்திலுள்ளவற்றைத் திறந்து கொட்டலாம் என எண்ணினேன்.

பிற்பகற் பொழுது அலிசு என் அறைக்குத் தேநீர் கொண்டுவந்தாள். என்னிடம் உள்ள துணிவு எல்லாவற்றையும் வரவழைத்துக்கொண்டு "அலிசு இன்று என்னை ஆறு மணிக்குத் தனிமையாகப் பக்கத்திலுள்ள தென்னந்தோப்பிற் காண். தவறவேண்டாம்.", என்றேன். அவள் ஒன்றுமே சொல்லவில்லை. வருவாள் என்று என் உளத்தில் ஏதோ சொல்லியது.

# சிவபூசையிற் கரடி

ஆறு மணியளவிற் தென்னந் தோப்பிற்கு உலா வச் செல்லும் சாட்டை வைத்து, ஒன்றும் அறியாப் பரம சாதுபோலத் துப்பாக்கியைத் தூக்கித் தோளிற் போட்டுக்கொண்டு சென்றேன். சிறுவயதிற் படித்த உருத்திராட்சப் பூனையின் கதை என் நினைவுக்கு வந்தது. அங்கு நான் போனதும் அலிசைக் கண்டேன். என் நெஞ்சு குமுறியது. இம்முறை அவளை என் பக்கத்திற்குத் திருப்பி என்னுடைய காதலியாக்கலாம் என எண்ணினேன். ஏழைப் பெண்ணுக்கு எசமானின் காதல் கிடைத்திருக்கக்கூடியதோ? எளிதில் வெற்றியடையலாம் என்பது எனது திடமான நம்பிக்கை. கூர்ந்து நோக்கியபொழுது, என்னைப் பார்த்து ஏளனஞ் செய்யும் முறையில், ''களுக்'', ''களுக்'' எனச் சிரித்த அதே பெண் நின்ருள். ''சிவபூசையிற் கரடி புகுந்தது'', என்னும் பழமொழிதான் என் உளத்திற் பட்டது. மீண்டும் பயப்பட்டேன். என் காதல் நாடகத்தையும், அலிசின் நடத்தையையும் அவதானிப்பதற்காக என் நண்பனே அல்லது அவனின் மனைவியோ இவளை அனுப்பியிருக்கலாம், என எண்ணும் போது என் நெற்றி வியர்த்தது. உலாவிற்கு வந்த போது இவர்களை எதிர்பாராத விதமாகக் கண்டவன் போல அப்பாவியாக நடித்தேன். என்னை நோக்கி அலிசு வந்தாள். அலிசை எப்படியும் அடைய வேண்

டும் என்ற எண்ணம் எனக்கு அப்பொழுது நிறைந்திருந்தது. அலிசின்பின் அப் பெண்ணும் நடந்து வந்தாள்.

"அலிசு, நான் சொன்னதைச் சொல்", என்றாள் அப்பெண். தேன்போல இருந்தது அவளின் குரல்.

"நீங்கள் சொல்லுங்கள்; என்னுடைய ஐயா தங்கமென்றாற் தங்கந்தான்.", என்றாள் அலிசு.

உடனே அந்தப் பெண் பேசத் தொடங்கினாள். கதைகளில் வருவதுபோல அவள் நாணிக் கோணிப் பேசவில்லை. எவ்விதமான வெட்கமும் இன்றிக் 'கட கட' எனப் பேசினாள்.

"நான் நல்ல இனத்துக் கோழிக்குஞ்சுகள் வளர்க்கின்றேன். அவைகளிற் பலவற்றை ஒரு பெரும் பருந்து பிடித்துப் பிடித்துத் தின்கின்றது. அதனைச் சுடுவீர்களோ?", என்றாள்.

"பருந்து பறக்கும்பொழுது சுடுவது இலகுவான காரியமல்ல.", என்றேன் நான்.

"பறக்கும்பொழுது சடவேண்டாம். அஃதோ உள்ள சாய்ந்த தென்னை மரத்தில் அந்தப் பருந்து இரவில் வந்து தங்கும். அப்பொழுது சுடலாம்." என்றாள் அவள்.

மூவரும், சாய்ந்த தென்னை மரத்தை நோக்கி நடந்தோம். "அட கடவுளே! இந்தச் சனியன் பிடித்த பெண் என் அலிசை ஒரு நிமிடமும் தனியாக இருக்க விடாளாம்.", என்று என் உள்ளத்திற் கடிந்து கொண்டேன். அரைமணி நேரமாக ஒன்றுமே பேசாது மூவரும் பருந்து வருவதைப் பாத்துக்கொண்டு இருந்தோம். கடைசியாகப் பருந்து வட்டமிட்டுவிட்டு மரத்தில் வந்து இருந்தது. துப்பாக்கியை உயர்த்தி

இலக்கு வைத்து விசையைப் பொறித்தேன். குண்டு பட்ட பருந்து சிறகை அடித்துப் பறந்தது.

"ஐயோ! தப்பிவிட்டதே...!", என்ருள் அப் பெண்.

வேட்டையைப்பற்றி அவளுக்கிருந்த அறியாமையை அது காட்டியது. அனுபவசாலியான நான் பருந்தைப் பின்தொடர்து ஓடினேன். செட்டையை அடித்துக்கொண்டு பருந்து விழுந்தது. நான் அப் பருந்தைக் கையில் எடுத்து அவள் முன்பாக வைத்து விட்டு, 'இதோ, உன் பருந்து. என்னேயும் அலிசையும் குழப்பாதே போ!' என்னும் குறிப்பாக அவளேப் பார்த்தேன். அப் பெண் நாங்கள் இருந்ததையும் பாராது மகிழ்ச்சி மிகுந்து குதித்தாள்.

"சனிப் பருந்து செத்தது. எப்போது உனக்கு இயமன் வருவான் என நான் நேர்ந்தேன். கடைசியாக வேலே முடிந்தாய்", என்று ஆத்திரங் கலந்த மகிழ்ச்சியுடன் அவள் கூறினாள்.

செத்த பருந்தை வீட்டுக்கு எடுத்துச் சென்று மற்றவர்களுக்குக் காட்ட விரும்பினாள். பருந்தின் கால்களே ஒன்றுசேர்த்துக் கட்டி அதனே ஒரு தடியிற் கொழுவி நான் அவளிடம் கொடுத்தேன். அவளும் நன்றி கூறிவிட்டு அதனேக் கையில் எடுத்துக்கொண்டு, "வா அலிசு போவோம்", என்று அலிசையும் அழைத்துச் சென்ருள். என்னுடைய வெறுப்பு அளவு கடந்து சென்றது. நானும் வீட்டிற்குப் போனேன்.

இரவு உணவு முடிந்ததும் வீட்டு முன்புறச் சாய்வு நாற்காலியிற் படுத்திருந்தேன். அலிசு அப் பக்கமாக வந்தாள். நான் உடனே துள்ளி எழுந்து அவள் முன் சென்று மன்ருடுங் குரலில், "அலிசு! என்ன உன் நெஞ்சு கல்லோ? நான் எசமானன் ஆனபடியால்

பாசாங்குக் காதல் புரிந்து உன்னை ஏமாற்றுவேன் என எண்ணுகிருயோ? இல்லை! ஒரு போதும் இல்லை! உளமார உன்னைக் காதலிக்கிறேன். நீ விரும்பினுல் நாளைக்கே திருமணப் பதிவு செய்வோம்'', என்றேன்.

''இரையாதீர்கள்! நாளைக்குப் பேசலாம். தென்னந்தோப்பிற் காணுவோம்'', என்ருள்.

என் மகிழ்ச்சி எல்லை கடந்தது. உச்சி நின்று உள்ளங்கால் வரை ஏதோ உணர்ச்சி பாய்ந்தது.

# வழி பிறந்தது

இரவு முழுவதும் படுக்கையிற் புரண்டேன். மகிழ்ச்சி கூடியபடியால் நித்திரை வரவில்லை. கிழக்கு வெளுக்கும் நேரம் வந்தது. பறவைகள் கலகலத்தன. தூரத்திலுள்ள குயிலொன்று தன் பேட்டை அழைப்பது போலக் கூவிற்று. நான் எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு முற்றத்திலிருந்தேன். இரு காகங்கள் சோடியாக வந்து முற்றத்தில் இறங்கின. கூடு கட்டுவதற்குச் சிறு சுள்ளித் தடிகளை எடுத்துத் தங்கள் கருஞ்சொண்டில் வைத்து நான் அறியாத ஏதோ ஒரு மொழியில் அவை பேசின. நானும் அலிசும் இன்னும் சில காலத்தில் இப்படியாவோம் என எண்ணி அக மகிழ்ந்தேன். அப்பொழுது என்னைப் படிப்பித்த ஆசிரியர், நான் பள்ளிக்கூடம் விடும்போது என்னைப் பற்றிக் கூறியவை என் நினைப்பில் வந்தன. வயதிலும் அறிவிலும் முதிர்ந்த அவர் சொல்லுபவை ஏறக்குறைய சரியாகத்தான் வரும் :

"நீ நல்லபிள்ளைதான்; ஆனாலும் சரியான முரடன். பெரும்பாலும் நீ தனித்து வாழத்தான் விரும்புவாய்", என்று சொல்லிவிட்டுக் குறுநகை செய்தார். "எந்த மடைச்சி உன்னைக் கலியாணஞ் செய்வாள் என்று நானுஞ் சாகாமல் இருந்தாற் பார்ப்பேன்!" என்று அன்புடன் பகிடியாக மேலும் சொன்னார்.

மணம் முடிந்ததும் நானும் அலிசும் ஒருமித்து அவரிடஞ் செல்வதென எண்ணக் கோட்டை கட்டினேன். உணர்ச்சியில்லாதபடியால் என்னை அவர் 'மரம் நாகராசன்' என்றழைப்பார்.

பொழுது போகவில்லையே என்று என் உள்ளம் துடித்தது. கடைசியாகப் பிற்பகல் வந்தது. தென்னந்தோப்புக்குட் போகும்போது என் முரட்டுக் குரலில் எனக்குத் தெரிந்த ஒரு பாட்டை எருமைக் கடா இரைவது போலப் பாடிக்கொண்டு சென்றேன். அங்கு அலிசு நின்ருள். ஆனுல், அதே கண்ருவிதான் என்னை எதிர்பார்த்து நின்றது. பாழாகப்போன அந்தப் பெண்ணும் நின்ருள். நான் மாத்திரம் சிவபெருமாஞக இருந்தால் அந்தப் பெண்ணை நெற்றிக்கண்ணிஞல் உடனே எரித்திருப்பேன். மூவரும் சந்தித்தோம். நான் பருந்தைச் சுட்டு வீழ்த்தியதற்காக அப் பெண் தன் நன்றியைத் தெரிவித்தாள். பின்னர் ஏதோ அலிசும் அவளுமாகப் பேசிஞர்கள். என் காதில் அரைகுறையாக அவை பட்டன. இடையிடையே அலிசு என்னைப் பற்றிப் புகழ்ந்து பேசிஞள்.

இந்தப் பெண் என்னுடைய களவைக் கண்டு பிடிக்க வந்திருப்பதாக எண்ணினேன். எனவே, அவள் மீது எனக்கு வெறுப்பு வந்தது. அரைமணி நேரமாக உரையாடியபின்னர் மூவரும் வீட்டிற்குச் சென்ருேம். அன்று இரவும் அலிசைக் கண்டு ஏதோ எல்லாம் உளறினேன்.

''நாளைக்குத் தென்னந்தோப்பு'', என்ருள் அவள்.

''அந்தச் சனியனை விட்டுவிட்டு வா'', என்றேன்.

''அதெப்படி? எசமானி வரப்போவதாகச் சொன்ஞல் நான் எப்படி வரவேண்டாம் எனலாம்? வீணுக ஐமிச்சப்படுவார்கள். என்னுடைய வேலையும் போய் விடும்'', என்ருள்.

"அலிசு! வேலை எதற்கு? நீதானே என்னுடைய எசமானியாகிவிடுவாய்", என்றேன்.

"சரி, நாளைக்கு..." அவள் சிமிட்டிவிட்டுச் சென்ருள்.

நானும் நாளை வரும் என எண்ணி மகிழ்ந்து அதனைக் காத்திருந்தேன். வழக்கம்போல் விடிந்தது. பிற்பகல் வந்தது. தென்னந்தோப்பிற்குப் போனேன். பழைய கதைதான். அந்தப் பெண்ணும் அங்கு இருந்தாள். எனக்கு வந்த எரிச்சலைக் காட்டாது நானும் சென்றேன். அலிசு என்னை நோக்கித் தனிமையாக வந்தாள்.

"இங்கு நாங்கள் பேசமுடியாது. இரவு பத்து மணிக்குப்பின் வீட்டின் தென்கிழக்கு மூலையில் என்னை இன்று காணுங்கள்", என்ருள்.

என்னுடைய மகிழ்ச்சியை வெளிக்காட்டாது ஏதோ எல்லாம் பேசினேன். பின்னர் வழக்கம்போல வீட்டுக்குப் போய் இரவு உணவு அருந்திவிட்டு ஒன்பது மணி வரையும் பல்லைக் கடித்துக்கொண்டு அறையில் அங்கும் இங்கும் உலாவினேன். ஒன்பது மணியாயிற்று. அறைகளிலுள்ள விளக்குகளெல்லாம் அணைந்தன. ஒரு அறை விளக்கு மாத்திரம் எரிந்தது. 9-50க்கு அதுவும் அணைந்தது. எனக்குப் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது. காட்டிற் புலி வேட்டைக்கு இரவிற் பதுங்கிப் பதுங்கிச் சென்ற எனக்கு, இந்த வீட்டில், இந்த இரவிற் செல்வது கடினமல்ல. வேட்டைக்குப் போகும்போது அடிக்காத என் நெஞ்சு 'திக் திக்' கென அடித்தது. இதுவும் காதலின் வேட்டையோ, என எண்ணினேன்.

தென்கிழக்கு மூலைக்குப் போனேன். அங்கே இருட்டில் ஓர் உருவம் என்னைக் கண்டதும் அசைந்தது. அதுதான் அலிசு. மெல்லெனச் சென்று ஒரு எட்டில் எட்டி அவளின் தோளைப் பிடித்தேன். பின்னர்

நான் பாடமாக்கியதை ஒப்புவித்தேன். ''கண்ணே! நீ இல்லாவிட்டால் நான் உயிர் வாழமுடியாது. என் வாழ்வைப் பூத்துக் குலுங்கச் செய்வது நீதான். இல்லை என்று சொல்லாதே'', இதுவரையும் நான் சொன்னதும் என்னுடைய தொண்டை வரண்டுவிட்டது. பின்னரும் தொடர்ந்து சொன்னேன். ''நாங்கள் இந்த இடத்தைவிட்டு வெளியேறவேண்டும். என்ன?'', என்றேன். வேறு எல்லாம் ஏதோ உளறினேன். இப்பொழுது அவை எனக்கு நினைவில்லை. அவளுடைய தோள்மேலாகப் போட்டிருந்த என் கையில் ஒரு சொட்டுக் கண்ணீர் சுட்டுக்கொண்டு வீழ்ந்தது.

''நற்செய்திதானே. ஏன் அழவேண்டும்?'', எனத் தேற்றினேன். பின்னர், ''இனிப் போவோம். நாளைக்கு இவ்விடம்...'' என்றேன்.

இதுவரையும் பேசாமலிருந்த அலிசு, ''நாளைக்கு முடியாது, அடுத்தநாள்'' என்றாள். குரலைக் கேட்டதும் என் மனதில் ஏதோ ஐயப்பாடு தோன்றியது. ''அலிசின் குரல் இது இல்லையே...'', என்று என் உளத்திற் பட்டது. மகிழ்ச்சியினாற் குரல் மாறியிருக்கலாம். அது அலிசு இல்லாவிட்டால்...? அது எப்படி முடியும்? நாங்கள் இந்த இடத்தில் இரவில் காண்பது என்பது எங்களிருவருக்குத்தான் தெரியும். வேறு ஒருவருக்குமே தெரியாது.

நான் போய்ப் படுத்தேன். தலைகால் தெரியாத மகிழ்ச்சி ஏற்பட்டது. என்னையும் ஒரு பெண் காதலிக்கிறாள் என எண்ணிப் பெருமைப்பட்டேன்; ஆனால், அது அலிசுதானோ என்ற ஐயம் மீண்டும் வந்தது. ஐயப்பாட்டுடன் பயமும் சேர்ந்தது.

# குறி தவறிய அம்பு

காலையில் என் ஐயம் பயம் எல்லாம் ஓடி மறைந்தன. என் அறைக்குள் பதுங்கிப்பதுங்கி ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து தந்தாள் அலிசு. தந்தபின் மின்னலென மறைந்தாள். அதனை ஆவலுடன் வாசித்தேன்.

"என் தெய்வமென நான் கருதும் உத்தமரே!

என்னைக் கைவிடவேண்டாம். உங்களைக் கண்ட நாள்முதல் என் உள்ளம் உங்கள்மீது பதிந்து விட்டது. உங்களை மறைவில் இருந்து கவனித்து அதில் ஒரு இன்பம் அடைந்தேன்; மறுமொழி எழுதவும்......"

கடிதம் கிடைத்தது, காலை ஏழு மணிக்கு. 'இந்த அலிசுவிற்கு இதைச் சொல்ல வெட்கமோ? நேராகச் சொல்லலாமே!', என எண்ணினேன். நானும் எட்டு மணி வரையிற் கடிதம் எழுதினேன். ஒன்பதரை மணிக்கு உணர்ச்சி மிக்க ஒரு மறுமொழி வந்தது. அப்படியாக உணர்ச்சியைக் கொட்டி என்னால் எழுத முடியாது. என்னுடைய உளம் கல்லுத்தானே? இரண்டாவது கடிதத்தையும் அலிசிடம் கொடுத்தேன். அதற்கும் முத்துமுத்தாக எழுதப்பெற்ற மறுமொழி வந்தது. மூன்றாவது கடிதத்தையும் என்னால் இயன்ற வரை உணர்சியைக் கொட்டி எழுதினேன். அப்பாடா!

ஒரு நாளில் மூன்று காதல் ஓலைகள். எல்லாம் அலிசின் மகிமை என எண்ணி மகிழ்ந்தேன். அடுத்தநாள் ஒன்றும் நடக்கவில்லை. அதற்கு அடுத்தநாட் காலையில் நான் முகச்சவரஞ் செய்துகொண்டிருக்கையில் என் நண்பன் என் அறைக்குள் வந்தான். ஒரு பெருங் குண்டைத் தூக்கி என்மீது போட்டான். அந்த உணர்ச்சியை நான் இப்பொழுதும் மறக்கவில்லை குண்டு பட்ட பெண்புலி என்மீது பாய்ந்தபோதும் அஞ்சாத நான், என் நண்பனின் மகிழ்ச்சியினுற் பிறந்த குறுநகையுடைய முகத்தையும், அவன் அழகிய வாயில் இருந்து வெளிவந்த மிருதுவான சொற்களையும் கேட்டு அஞ்சி நடுங்கினேன். "என்ன தம்பி! எங்களுக்குச் சொல்லாமல் நடக்கின்ற அலுவல். நானும் என் மனைவியும் இப்படி நடந்தால் என எண்ணியதுமுண்டு. இதுபற்றியும் பேசினோம். இப்பொழுது தம்பி முந்தி விட்டார். சரி. கலியாணம் எப்பொழுது? அந்தப் பெண் என்னுடைய மனைவியின் ஒன்றுவிட்ட சகோதரி. எங்களுடன்தான் இருக்கின்றாள். நிறைய வயல்களும், வங்கியிற் காசும் இருக்கின்றன. உன் பெருஞ் செல்வத்தோடு இந்தச் சொத்தும் சேரப்போகிறது. செல்வத்தோடு செல்வம்", என்றான் மூச்சுவிடாமல்.

எனக்குத் தலை சுழன்றது. அன்றைய ஐயப்பாடு சரிதான். நான் இரவிற் சந்தித்தது அலிசு அல்ல என்பது உறுதியாயிற்று. அவசரமாகச் சவரத்தைச் செய்து முடித்ததும் 'பொத்' தென்று கதிரையில் வீழ்ந்தேன். "அலிசு! என் அலிசு!" என்று உளம் அடித்தது.

"தம்பி ஒரு நாளில் மூன்று காதற் கடிதங்கள் எழுதினார். இனி விட்டுவைக்கப்படாது. நல்ல நாளில் தாலி கட்டவேண்டும். உன்னுடைய ஆசைநாயகி கடிதத்தை மறைவாக வைத்து வாசிக்க என்னுடைய மனைவி பிடித்துவிட்டாள். நானும் என் மனைவியும்

முன்னர் உதேமாதிரித்தான் காதற் கடிதங்கள் எழுதினேம்'', என்ருன் என் நண்பன்.

அவன் பேசுவதைப் பார்த்தால், மழை பெய்யும் போது தாழ்வாரத்தால் நீர் 'சளசள' என வடிவது போல இருந்தது. என் முகத்திற் பயம் குடிகொண்டது.

''பேயா! ஏன் பயப்படுகிருய்? நல்ல மங்கல காரியந்தானே? இரண்டு பகுதி அலுவல்களும் நான் தானே பார்க்கவேண்டும். உனக்கும் ஆள் உதவியில்லை. அந்தப் பிள்ளையும். அப்படித்தான் என்னுடைய பாடு பிழையில்லை...'', என்று அவன் பகிடியாகப் பேசினுன்.

எனக்கு வந்த எரிச்சலை என்னவென்று சொல்வது?

''ஐயோ! அலிசு! என் அலிசு! இது ஏதோ சூழ்ச்சி; வஞ்சம்; பொறி; கண்ணி; படுகுழி'', என என் மனம் அடித்தது.

# இதயத் துடிப்பு

அன்று முழுவதும் அலிசைத் தேடினேன். அவளைக் காணவில்லை. இந்தச் செய்தி அவள் காதிற்கு எட்டி யிருக்கும். பாவம்! உளம் உழுத்து ஒடிந்து நொருங்கி எங்கோ ஒரு மூலையிற் சுருண்டு படுத்திருப்பாள் என நினைத்தேன். அலிசைக் காணுமல் நான் வேறு அலு வல்களைப் பார்ப்பதில்லை என்று முற்றுக்கட்டினேன். அவளைக் கண்டு இச் சூழ்ச்சியைத் தகர்த்து எறிவதெ னக் கங்கணங் கட்டினேன். என் நண்பன் படு மோசக்காரன் எனக் கருத்துக் கொண்டேன்.

என் நண்பனிடஞ் சென்று கடுகடுப்பாக, "அலிசு எங்கே?" என்றேன். என் கடுகடுப்பை உணராத என் நண்பன் சிரித்துவிட்டு, "வேலைக்குப் போய்விட்டாள்." என்றான்.

பித்துப் பிடித்தவன்போல, அலிசு கருவாடு காயவைக்குமிடத்திற்கு விரைந்தடித்து ஓடினேன். காலிற் கல்லடித்ததையும் நான் அறியேன். அலிசு தான் அதனையும் காட்டினள். நான் எதிர்பார்த்தபடி அவள் வாடவுமில்லை; அழவுமில்லை; மெய்சோரவு மில்லை; கைகள் நடுங்கவுமில்லை.

"அலிசு! என்னை மன்னித்துவிடு; இச் சூழ்ச்சியை முறியடிப்போம். அவர்கள் என்னை வேட்டையாடி

வலையிலே பிடித்துவிட்டார்கள்'', என நாக்குளறக் கூறினேன்.

அவள் சிறு புன்சிரிப்புடன், ''தப்ப வழியில்லை! நீங்கள் அப் பெண்ணை மணஞ் செய்யுங்கள்'', என்ருள். அத்தி பூத்தாப்போல மலர்ந்த என் காதல் ஒரு கணத்திற் கருகிச் சாம்பராகிவிட்டது.

''நான் எழுதிய கடிதங்கள்...?'' என்றேன்.

''என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம்'', என்ருள் சினத்துடன். ஏமாற்றத்திஞல் அவள் அப் படிச் சொல்கிருள் என எண்ணி மீண்டும் மன்ருடி னேன்; கெஞ்சினேன். பயனில்லை. ''படார்'' என அவள் கன்னத்தில் அடித்தேன். அவள் சிரித்தாள். கோபம் போய் எனக்கு வெறுப்பு வந்தது.

''கேவலம், வேலைக்காரப் பெண்தானே! அவள் தன்னுடைய இழிவான குணத்தைத்தானே காட்டு வாள். என்ன சொல்கின்ருய்? அப் பெண்ணை மணக் கட்டுமா?'' என்றேன்.

''யாராம் கையிலே பிடித்தது?'', என்ருள்.

திரும்பி வீட்டிற்குப் போனேன். என் நண்பன் இருந்தான். அவனின் மனைவி மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்தாள். அந்த வீடும், வீட்டிலுள்ள கூரை ஓடுக ளும் சிரிப்பதுபோல எனக்குத் தெரிந்தது, எசமான் என்னை வலை விரித்துப் பிடித்ததைக் கண்டு அவை களும் மகிழ்ச்சி அடைந்தன போலும்.

என் அறைக்குட் போனேன். ஒரு வழக்கறிஞனி டம் யோசனை செய்து இந்த மோசக் குழியில் இருந்து தப்பி அலிசை அடையலாமோ என் எண்ணினேன். பின்னர் அலிசு என்னை அவமதித்ததை எண்ணிப் பல்லை நெறுமினேன். கோபத்திற் கண்கள் துடித்தன.

என்ன செய்வதென்று அறியாமல் அறைக்குள் உலாவினேன். என் அறைக்குள் 'திடுதிடு' வென வந்து, ''கலியாண ஒழுங்கெல்லாம் என்னுடன் இருக்கட்டும். நீ சாப்பிட வா. எப்பொழுது கலியாணம்? பன்னிரண்டாந் திகதி நல்ல நாள்'' என்முன் என் நண்பன்.

எனக்கிருந்த கோபத்தில் ''ஓம்'' என்றேன். அலிசிற்கு இது நல்ல பாடம் என எண்ணினேன். அவளை இது பாதிக்கவில்லையெனப் பின்னரே அறிந்தேன். நான் செய்த பிழை எனக்கு விளங்கியது. ஒரு போதும் நான் இக் கல்யாணத்திற்கு உடன்பட்டிருக்கக் கூடாது. ஆத்திரத்தில் ஓமென்று சொன்னதின் பிழை தனிமையாயிருந்து எண்ணி எண்ணிப் பார்க்கும் பொழுதுதான் தெரிந்தது. தனிமையான வாழ்வும், வேட்டையாடுதல் போன்றவைகளில் வரும் முரட்டு இன்பமும் என் மனதை ஈர்த்தன. கல்யாணம் என்முற் கால் விலங்கு அதன் பின்னர் பிள்ளைகள் பிறந்தாற் கைவிலங்காகி விடும் என எண்ணித் துக்கமடைந்தேன்.

என் உளம் துடிப்பதுபோல அலிசும் துடிப்பாளோ என எண்ணினேன். பின்னர் என் அலிசு என்னை ஏன் வேண்டாவெறுப்பாக நடத்தினுள்? தெருத்தெருவாகத் திரிந்த நாடோடிப் பெண்ணுகையால் என்னுடன் பொழுது பொழுதுபோக்கிற்குக் காதல் புரிந்தாள் போலும். இனிமேல் அவள் என்ன செய்வாள்? உடம்பிற் பலம் இருக்கின்றதுதானே? வாழ்நாள் முழுவதும் கூலிவேலை செய்வாள். இதைப்பற்றி எண்ணும் போது என்னுடைய எதிர்கால மனைவியைப் பற்றியும் எண்ணினேன். எல்லாவற்றையும் தகர்த்தெறிந்து விட்டுக் காட்டில் வாழும் மிருகங்களைப்போல இவ்வுலகிற் சுற்றியலைய எண்ணினேன். தப்பியோட முயலும் மறியற்காரன் கையில் இரும்புக்காப்பு இருப்பது போல என்னையும் இந்த மூன்று கடிதங்களும் கைவிலங்கு பூட்டி இழுத்தன.

# ஆப்பிழுத்த குரங்கு

நண்பனிடம் “ சென்று எனக்கு வேண்டாம் இந்தக் கல்யாணம்'', எனச் சொல்லவிரும்பினேன். மதயானை போலக் கையைக் காலை அடித்துக்கொண்டேன். என் நண்பனைத் தேடினேன்; அவனைக் காணவில்லை. அவன் எங்கு சென்ருன் என வினவினேன். பட்டணத்திற் குப் போய்விட்டான் என அறிந்தேன். அவன் அங்கு தங்கி நிற்கின்ற முகவரியை அவன் மனைவியிடமிருந்து வாங்கித் தந்தி அடித்தேன். தந்தியில், “கட்டாய மாகச் செய்யமுடியாது'', எனக் குறிப்பிட்டிருந்தேன். தந்தியைக் கொடுத்த பின்னர் பசும்புல்லில் மேய்ந்து விட்டுத் துள்ளும் காளை மாடுபோலத் துள்ளித்துள்ளி வந்தேன். நூறு யானைகளையும், இருநூறு புலிகளையும் வேட்டையாடினுற்கூட எனக்கு அவ்வளவு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்காது. அறையினுட் சென்று படுக்கையிற் புரண்டேன்; துள்ளினேன்; ஆகா! எனக்கு மீண்டும் சுதந்திர வாழ்வு வந்து விட்டது. ஒன்றியாக வாழ் வேன். ‘காதலாவது கூதலாவது; காதலென்பது தற் காலிக விசர். நல்லவேளை முழுவிசராக முன்னர் தப்பி விட்டேன், என எண்ணி மகிழ்ந்தேன்.

பின்னர் அலிசின் எண்ணம் வந்தது. நான் முரட ஞக இருந்தபோதும் என்னிடம் ஒரு விதமான நேர்மை யும் இரக்கமும் இருந்தன. வேட்டையாடும்பொழுது

கூடக் குட்டிகளுடன் செல்லும் தாய்ப் புலியை ஒருசில வேளைகளிற் தப்பிச்செல்ல விட்டேன். கல்லாக இருந்தாலும் என் உள்ம் இடையிடையே கசிவதுண்டு. எனவே, பெருமையையும் பார்க்காது அலிசிடம் ஓடினேன்.

"அலிசு, என்னை மன்னித்துவிடு. நான் எவரையும் மணஞ்செய்யப் போவதில்லை. உன்னை ஏமாற்றியதற்காக இரண்டாயிரம் ரூபா தருகிறேன்", என்றேன்.

"ஐயா! உங்களைக் கும்பிட்டேன்; எனக்கு ஏன் காசு? ஒரு பெண்ணின் காதலை நினைத்தபடி பெறலாம். அதற்கு நட்டஈடாகப் பணங் கொடுக்கலாம் என எண்ணுகிறீர்கள். என்ன மடமை இது!", என்ருள்.

அப்பொழுது என் உள்ம் மணவாழ்வை விரும்பவில்லை. எனவே, என்னை மணஞ்செய் என நான் கேட்கவுமில்லை. அவள் என்ன நினைத்தாளோ அறியேன். பல ஆண்டுகளுக்குப் பின்னர்தான் எனக்கு அது தெரியவந்தது. பெண்களின் உளம் பட்டுப்போல மிருதுவானது; உணர்ச்சி மிகுந்தது. அதனை ஒருபோதும் ஆண்கள் அறிய முடியாது என்பதையும் அலிசு எனக்குப் படிப்பித்தாள்.

"உனக்குக் காசு வேண்டாமா?", என்றேன்

"வேண்டாம்! வேண்டாம்!", என்று கணீர் என மணியோசைபோல மறுமொழி வந்தது. அலிசு நிலத்தைக் கால்விரலாற் கிண்டிக்கொண்டிருந்தாள்.

"உங்களுக்குப் பன்னிரண்டாந் திகதி கல்யாணமாம்! என்னுடைய ஐயாவிற்கு நான்தான் நிறைய வேலை செய்வேன்", என்ருள்.

"அது ஒன்றுமே நடவாது. நான் என்னுடைய வீட்டிற்குப் போகின்றேன். பின்னர் நான் இங்கு வந்தால் உன்னைக் காண்பேன்", எனக் கூறி அவளின் மறுமொழியைக் காத்திராமல் வீட்டிற்குச் செல்லும் பாதையை நோக்கி நடந்தேன்.

"ஐயா! ஐயா!", என அவள் கீழ்க்குரலாற் கூப்பிட்டதையும் நான் பொருட்படுத்தவில்லை. ஓட்டமும் நடையுமாக வந்து வீட்டை அடைந்தேன்.

# பாசி படர்ந்தது

அறைக்குட் சென்று என் பெட்டியை அடுக்கும் போது பெருஞ் சத்தம் ஒன்று கேட்டது. சில நிமிடங்களில் இந்த வீட்டை விட்டுப் புறப்பட்டுப் போய் விடுவேன் என்ற மகிழ்ச்சியால் அந்தச் சத்தத்தைப் பற்றி அறிய நான் ஆவல் கொள்ளவில்லை; ஆனால், ஒரு நிமிடத்தில் என் மகிழ்ச்சி எல்லாம் மண்ணாகி விட்டது. என் நண்பன் என்னைப் பெரிய சத்தம் போட்டுக் கூப்பிட்டான். என்ன என்று பார்க்க உள்ளே போனேன். அவன் வரமுன்னர் அவன் வீட்டை விட்டுப் போகவேண்டும் என்ற எண்ணம் கைகூடாமற் போனதில் ஒரு பெரிய ஏமாற்றம் ஏற்பட்டது. என்னுடைய தந்தியை அவன் பார்த்திருப்பான். அதற்கு என்ன மறுமொழி சொல்லலாம் என எண்ணித் தயங்கித் தயங்கி அவன் இருக்கும் அறையை அடைந்தேன். மீண்டும் எனக்குப் பெரும் அதிர்ச்சி காத்திருந்தது.

கலியாண ஒழுங்கிற்காகப் பெண்ணுக்கு வேண்டிய நகைகளும், சேலைகளும், எனக்கு வேண்டிய சரிகை வேட்டிகளும், சால்வைகளும் இன்னும் பலவேறு பொருட்களும் அவன் வாங்கிக் கொண்டு வந்து பரவி வைத்து அழகு பார்த்துக்கொண்டிருந்தான். நானும்

அவைகளைப் பார்த்து மகிழவேண்டும் என்பது அவன் எண்ணம். என்னுடைய உளமாற்றத்தை அவன் அறியான்போலும். இதிலிருந்து என்னுடைய தந்தி அவனுக்குக் கிடைக்கவில்லை என்பது தெரிந்தது.

"நான் தந்தி அனுப்பினேன், கிடைக்கவில்லையோ?," என்றேன். "தந்தியாவது! கிந்தியாவது! நான் பட்டணத்தில் இல்லாவிட்டால் திருப்பி அனுப்புவார்கள்தானே? அது இருக்கட்டும், இவைகள் நல்லதா எனப் பார்," என்றான்.

எனக்கு வந்த ஆத்திரத்தில் ஒன்றுமே சொல்லாமல் நிலத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

"இந்தா உனக்குச் சோமன்சோடி வேட்டி சால்வை. தாலிக்கொடி வாங்கப் பின்னேரம் போவோம். நல்ல கூறையும் வாங்க வோண்டும்," என்று சொல்லி விட்டுத் தன் சட்டைப் பையிலிருந்து கண்ணைப் பறிக்கும் அழகு வாய்ந்த வைரக்கல் மோதிரம் ஒன்றை எடுத்து என் கையிலே போட்டான். பின்னர் விலை உயர்ந்த கை மணிக்கூடு ஒன்றை எடுத்து என்கையிலே கட்டினான். என் பேச்சுக்கோ மறுமொழிக்கோ அவன் காத்திருக்கவில்லை. என்னைப் பிடிப்பதற்குரிய வலையிலுள்ள கயிறுகள் இந்த அன்பளிப்புகள் என எண்ணினேன். மணஞ் செய்வதோ விடுவதோ என்னும் போராட்டம் என் உளத்தில் எழுந்தது. என் வெறுப்பை என் நண்பனிடம் சொல்ல உளம் ஏவவில்லை. முகத்தை முறிக்க முடியாமல் நான் பெரும் பாடுபட்டேன்.

ஐயப்பாடு எனும் பாசி என் உளம் எனும் குளத்தில் விறுவிறெனப் படர்ந்தது. அந்தப் பெண்ணில் ஏதோ குறைபாடு இருக்கலாம். சீதனம் இருக்கின்றது. ஏதாவது உறுப்புக்குறைவு இருக்கலாம். சில சமயம் தீராத நோயாற் பீடிக்கப்பட்டிருக்கலாம். அதுதான் என்னிலே இப் பெண்ணைக் கட்டியடிக்க

முயலுகிறார்கள் எனச் சீரிய உளப்பான்மையுடைய என் நண்பன்மீது ஐயப்பாடு பிறந்தது. இவ்வெண்ணங்கள் பிழை எனப் பின்னரே அறிந்தேன்.

இதற்கிடையில் அலிசு வந்தாள்; அங்குள்ளவற்றையெல்லாம் பார்த்து மகிழ்ந்தாள். எனக்கு மணம் நடப்பதனாற் தனக்குப் பெரும் மகிழ்ச்சி எனக் காட்டிக்கொண்டாள். ஆனால் அவளுக்கு அது ஒன்றுமில்லை என்று எனக்குப் பின்னர்தான் தெரியும். பெண்கள் நடிப்பிலே கைதேர்ந்தவர்கள்தானே! நான் அனுப்பிய தந்தி ஆளில்லாதபடியால் திரும்பி வந்தது. நல்ல காலம் என் கையிற்றான் அகப்பட்டது. அதனை எவருக்கும் காட்டாமற் கிழித்து எறிந்துவிட்டேன்.

## உளப் போராட்டம்

இந்தப் பெண்ணை உதறி எறிந்துவிட்டு ஓடவேண்டும் என என் உள்ளம் துடித்தது. இவ்வளவு ஏற்பாடுகளுஞ் செய்த பின்னர் எப்படி இதனை என் நண்பனிடம் சொல்லலாம்? காளவாய் போல என் உளம் வெந்துகொண்டிருந்தது. அலிஸைப்பற்றி எண்ணினேன். அவளைக் காதலிக்கப்போய்க் கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாகி யாரோ ஒரு பெண்ணுக்குத் தாலி கட்டவேண்டியதாயிற்றே என எண்ணினேன். நான் எழுதிய கடிதங்கள் அவளிடம் இருக்கின்றன. பின்னர் நம்பிக்கைத் துரோகத்திற்காக வழக்கு வைத்தால்...? மானம் போய்விடும். என்னுடைய வீடு பெரியது. அதிற் பலர் இருக்க இடமுண்டு. நாய் ஒன்று வளர்க்கின்றேன். அதைவிடக் கரடிக்குட்டி ஒன்றும், சிறுத்தைப் புலிக்குட்டி ஒன்றும் கூட்டிலே அடைத்து வைத்து வளர்க்கின்றேன். அதைப்போலத் தாலிகட்டி இப் பெண்ணை அழைத்துக்கொண்டு போவேன் என முடிவு செய்தேன். கரடிக்குட்டியை அடக்க மூக்கிலே ஒரு சங்கிலி, புலிக்குட்டியை அடக்க அதன் கழுத்திலே ஒரு சங்கிலி, என் கையிலே ஒரு சவுக்கு. அதே போல இப் பெண்ணை அடக்கி நடத்த ஒரு தாலிக் கொடி இருக்கின்றது. புலிக்கும், கரடிக்கும் ஒரு கூடு. இப் பெண்ணுக்கு மிகவும் பெரிய கூடு. அதுதான் என் வீடு என முடிவு செய்ததும் என்னுடைய ஈரப்பசுமை

யில்லாத இரும்புப்புத்தி என்னிடம் பழையபடி வந்தது. எவ்விதமான மறுப்போ, உணர்ச்சியோ இல்லாமல் மா முதுபார்ப்பான் மறைவழி காட்டினுன். ஒன்றுமே பேசாமல் நான் தீவலம் வந்தேன்: இல்லை, வந்தோம்; அம்மி மிதித்தோம்; அருந்ததி கண்டோம். திருவளர் செல்வன் நாகராசனுக்கும், திருவளர் செல்வி கமல நாயகிக்கும் பெரியோர்கள் நிச்சயம் செய்தபடி திருமணம் இனிது நடைபெற்றது. உண்மையில் இது பெரியார்களால் நிச்சயம் செய்யப்பட்ட மணம் எனவே நான் அப்பொழுது எண்ணினேன்.

தாலிகட்டிய பின்னர், விருந்தும் வரவேற்புகளும் பெரியதாக நடந்தன. இவையெல்லாம் எனக்கு நரக வேதனையாகவே இருந்தன. பல்லைக் கடித்துக்கொண்டு எல்லாவற்றையும் பொறுத்து நடந்தேன். தனிமையாக இருக்கும்பொழுது கமலநாயகியிடம் நான் ஒன்றுமே பேசவில்லை. பலருடன் இருக்கும்பொழுது சாட்டிற்காக இரண்டோ ஒரு சொல்லோ பேசுவேன். ஆனல், கமலநாயகிக்கு என்னுடைய வேண்டா வெறுப்பு நடத்தை விளங்கவில்லை. நாங்கள் தனியாகக் குடித்தனம் நடாத்துவதற்குப் புறப்படும் நாளும் குறிக்கப்பட்டது. அன்று நடந்த நிகழ்ச்சியால் அவள் மேல் ஒருவித மரியாதை எனக்கு ஏற்பட்டது.

# முதற் கோணல்

என்னுடைய வீட்டிற்குத் தனியாக வசிப்பதற்கு நாங்கள் புறப்படும் நாளே சண்டை வந்தது. என் வீட்டிற் பெண்பணியாளர் ஒருவருமில்லாதபடியால் அலிசை அழைத்துப் போகும்படி என் நண்பனும் மனைவியும் வற்புறுத்தினார்கள். என்னுடைய மனைவிக்கும் அலிசு துணையாக இருப்பாள் என அவர்கள் எண்ணினார்கள். அலிசின்மீது நான் கொண்டிருந்த எண்ணமெல்லாம் சாம்பர் பூத்த நெருப்புத் தணல் போல இருந்தன. என் புதிய மனைவி ஐயுறவுப்படுவாள் என எண்ணி அவளைக் கடைக்கண்ணுற் பார்த்தேன். அலிசைக் கூட்டிக்கொண்டு போகவேண்டும் என நான் சொன்னால் என் புதிய மனைவி ஐயுறவுப்படுவாள். எனவே, கண்மூடி நான் மௌனியாக இருந்தேன்.

பழம் நழுவிப் பாலில் விழுந்ததுமல்லாமற் கற்கண்டுக் கட்டியும் பாலில் விழுந்ததுபோல, ''அலிசு! நீ கட்டாயம் வரவேண்டும். ஒரு வேலையும் நீ எனக்குச் செய்யவேண்டாம். துணையாக என்னுடன் வந்து இரு'' என்றாள் என் மனைவி கமலநாயகி.

''மாட்டேன். நான் இந்த இடத்தை விட்டு வர மாட்டேன்'' என்றாள் அலிசு.

"நீ சொன்னுற் கட்டாயம் கேட்பாள். நீயே கேள்", என்முன் என் நண்பன் என்னை நோக்கி.

"ஓம், ஓம். நீங்கள் சொல்லுங்கள். நீங்கள் கேட்டால் அவள் ஒருபோதும் மறுக்கமாட்டாள்", என என் மனைவி சிறுபிள்ளைகள் இனிப்பு வாங்குவதற்குத் தாயை மன்றாடுவதுபோல மன்றாடிக் கேட்டாள்.

அலிசு தன் வாழ்வைக் கெடுக்கக்கூடியவளாக என் வாழ்விலே தோன்றுவாளென்று கமலநாயகி எள்ளளவேனும் ஐயப்படவில்லை என்பதை உணர்ந்தேன். என்னுடைய மகிழ்ச்சியை வெளிக்காட்டாமல் "அலிசு! எங்களுடன் வா", எனச் சுருக்கமாக் கேட்டேன்.

அலிசு அழுதாள். "நீங்கள் எனக்குத் தெய்வம் போல இருக்கின்றீர்கள். உங்களுடைய காலைத் தொட்டுக் கும்பிடுகிறேன். என்னைக் கேட்கவேண்டாம். நான் வரமாட்டேன். மாட்டேன் என்றுல் மாட்டேன்", என்முள் அலிசு.

"சீ! நன்றி கெட்ட நாயே!", என என் காலைத் தொட வந்த அவளின் கைகளை நான் உதைத்தேன். அலிசு அழுதாள். கமலநாயகியும் அழுதாள். அந்த நேரந் தொடக்கம் காய்ந்த கருங்காலிமரம் போன்ற என் உளத்தில் கமலநாயகி ஒரு மதிப்பைப் பெற்றுவிட்டாள். பெண் பேதை கமலநாயகி என என் உளம் மாறியது. அவளை அன்பாக நடத்தாவிட்டாலும் கொடுமை செய்வதில்லை என நான் தீர்மானஞ் செய்தேன். கமலநாயகி அழுதுமுடிய ஒரு மணி நேரமாகிவிட்டது. நானும் அவளைத் தேற்றினேன். எனக்கோ அழும் பெண்களைத் தேற்றிப் பழக்கம் இல்லை. ஒருவாறு அழுகை முடிந்ததும் இருவரும் புறப்பட்டோம். இவ்வாறு கண்ணீருடன் எங்கள் புதிய வாழ்வு தொடங்கியது. அலிசு ஏன் வரமறுத்தாள் என்பது எனக்கு விளங்கவில்லை. ஏன் வரமறுத்தாள் அவள்?

## மலையும் மருவும்

எங்களுடைய புதுவாழ்வு தொடங்கியது. கமல நாயகி நன்கு சமைப்பாள். வீட்டு வேலைகளையெல் லாம் நன்கு செய்வாள். என்னுடைய விருப்பு வெறுப்புக் களை விரைவில் உணர்ந்து அதற்கேற்றபடி நடப்பாள். ஒருமாத காலத்தில் அவள் சிறந்த ஒரு பணிப்பெண் என எண்ணினேன். கலகலப்பாக என்னிடம் பேசு வாள். நானும் அவளுக்குப் பல கதைகள் சொல் வேன். வேட்டைக் கதைகள் சொல்வேன். வேட்டைக் கதைகள் என்றால் அவளுக்கு விருப்பம். ஒருநாள் வேட்டையினால் நிகழும் ஆபத்துக்களையும், பயத்தையுங் கேட்டதும் என்னுடைய பெரிய இரட்டைக்குழற் துப்பாக்கியைத் தன் அலமாரியிற் பூட்டிவிட்டாள். எனக்கு வந்த கோபத்தினால் அவளைக் கன்னத்தில் ஒரு முறை அடித்துவிட்டு அலமாரிப் பூட்டை உடைத்துத் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு வெளியே போனேன். நான் இரண்டுநாளாகத் திரும்பவில்லை. காட்டில் அலை யும்போது அலிசையும் கமலநாயகியையும் ஒப்பிட்டுப் பார்த்தேன். கமலநாயகி நல்லவள். பூங்கொடி போன்ற வள். ஆனால், அதை நான் விரும்பவில்லை. நானோ கருங் காலிமரம் போன்ற முரட்டு மனிதன். அதற்குச் சோடி யாக ஒரு முதிரைமரம் வேண்டுமென எண்ணினேன். அவள்தான் அலிசு என்றது என் ஆணித்தரமான முடிவு. அலிசிடம் உள்ள இயல்பான புத்திசாமர்த்தி

யம் கமலநாயகியிடம் இல்லை. எனவே, என் வெறுப்பு மேன்மேலும் கமலநாயகியின்மேல் வளர்ந்தது. காட்டில் வேட்டையாடும்போது மூர்க்கமான ஒரு புலி நெற்றி முட்டாக ஒரு முடக்கில் வந்து தென்பட்டது. புலிக்கும் எனக்கும் சுமார் முப்பது அடி தூரம் இருந்தது. பயமில்லாமற் துப்பாக்கியை உயர்த்திச் சுட்டேன். புலிமேற் குண்டு பாய்ந்தது. புலியும் என்மேற் பாய்ந்தது. நான் ஒரு பக்கமாக விழுந்து விலத்தினேன்; ஆனாற் புலியின் பின்னங்கால் நகம் என்னுடைய கைச் சதையைக் கிழித்துவிட்டது. சட்டையைக் கிழித்துக் காயத்தைக் கட்டினேன். பின்னர் அப் புலியின் தோலையும் உரித்துக்கொண்டு வீட்டிற்குப் போனேன்.

என்ன ஆச்சரியம்! அலிசு என்னைக் காண வந்திருந்தாள். என்னுடைய அலிசு என்னிடம் வந்துவிட்டாள். கமலநாயகியுடன் அவள் பேசிக்கொண்டிருந்தாள். என் மனைவி என்னைக் கண்டதும் மரியாதையாக எழுந்து நின்றாள். அலிசு வழக்கம்போலக் குறும்பாகச் சிரித்தாள். அச் சிரிப்பு என்னை என்னவோ செய்தது. என்னுடைய கையில் இருந்த இரத்தச் சீலையைக் கண்டதும் என் மனைவி மயங்கி வீழ்ந்தாள். அலிசு அவளை நிதானமாகத் தூக்கிப் படுக்கவைத்து விசிறி, நீர் தெளித்துச் சோர்வை நீக்கினாள். என்னுடைய கைப்புண்ணின் சீலையை அவிழ்த்துப் பார்த்தாள். "புலிநகம் நஞ்சு. வைத்தியரிடம் காட்டி மருந்து போடவேண்டும்", என்றாள் இரக்கத்துடன். அப்பொழுது அலிசின்மேல் எனக்கு அபிமானம் உண்டாகியது. சிங்கத்திற்கு மனைவி வெறும் பூனையோ? கமலநாயகி சிறு புண்ணைக் கண்டு மயங்கிய பூனை. ஆனால், அதைக் கண்டு நிதானமாக இருந்த பெண் சிங்கம் அலிசு. தீரசூரனாகிய எனக்கு வேண்டிய மனைவி அலிசு என எண்ணினேன். மீண்டும் உளத்தில் பாசி படைபடையாக அடர்ந்து படர்ந்தது.

# கிரகணம்

என் புண் ஆறிவந்தது; அலிசும் வீட்டிலிருந்தாள். ஆனால், இரண்டேயிரண்டு நாட்கள் தங்கினாள்.

"அலிசு, நீ ஏன் எங்களுடன் வந்து இருக்க மறுக்கின்றாய்?", என்ற பழைய கேள்வியைக் கேட்டேன்.

"அது என் விருப்பம். என்னுடைய அலுவல் எனக்குத் தெரியும்," என்றாள். எனக்கு மீண்டும் கோபம் வந்தது. கோபத்தை அடக்கிக்கொண்டு சில வற்றை அவளிடம் கேட்டறிய விரும்பினேன், கேள்வி கேட்டும் பயனில்லை.

அன்றிரவு என்னுடன் இருந்த பெண் யார்? அவள் அலிசு தானே? அலிசு ஏன் ஒன்றும் பேசாமல் இருந்தாள்? ஏன் கண்ணீர் வடித்தாள்? அது இன்பக் கண்ணீரோ? அல்லது என்னைவிட்டுப் பிரியப்போகின்றோம் என்னும் துக்கத்தினால் வடித்த கண்ணீரோ? என்னைப் பிரியவேண்டும் என்பது அப்பொழுது அவளுக்குத் தெரியுமோ? அது வேறு யாரும் பெண்ணாக இருக்கலாம். அப் பெண்ணும் வேறொருவனைப் பார்த்து நிற்க நான் போய்க் குறுக்கிட்டேனோ? இந்தக் கேள்விகளுக்கு மறுமொழி சொல்லக்கூடியவள் அலிசுதான். மேலும் நான் அலிசுக்கு எழுதிய கடிதங்கள் எங்ஙனம் என்னுடைய மனைவியிடம் சென்றன? நான் என்னுடைய கையாலேதானே அவைகளை அலிசிடம்

கொடுத்தேன். பின்னர் எங்ஙனம் கமலநாயகி அவை களை அலிசிடமிருந்து பிடுங்கி எடுத்துத் தன்னுடைய காதற்கடிதமென என் நண்பனுக்குக் காட்டி எனக்கு வலை விரித்திருக்கலாம்? அப்படியாயின் அலிசு ஏன் அதனை மறுத்து அழுது குளறவில்லை? என் மனைவி விரித்த வலை என் நண்பனுக்கும் தெரியலாம். அவன் அலிசைப் பயமுறுத்தியிருப்பான். மூன்று கடிதங்களி லும் நான், ''என் ஆருயிர் அன்பே,'' என எழுதினேன். அலிசு என ஒரு சொற் கூட்டி எழுதியிருந்தால் இக் கடிதங்களால் எவ்விதமான ஆபத்தும் ஏற்பட்டிருக் காது. அலிசு என்னை மணக்க மறுத்திருந்தாற்கூட நான் தனிமையாக வாழ்ந்திருப்பேன். இப்பொழுது இந்தப் பொறியில் மாட்டிக்கொண்டேன். என்விதி அப்படி இருந்தது.

என்னுடைய மனைவிக்கு வருத்தம் வந்தது. அப் பொழுதுங்கூட எனக்கு இந்த எண்ணங்கள் வந்தன. ஒரு நாள் இரவு, அவள் வருத்தம் சிறிது குறைந்த படியால் நித்திரை செய்தாள். அந்த அறையிலிருந்த துப்பாக்கியைத் துடைத்துக்கொண்டிருந்தேன். திடீ ரென எழுந்து அவள் கழுத்தை நெரிக்கக் கையைக் கொண்டுபோனேன். அவள் கண் விழித்துக் கொண் டாள்.

''அந்த மருந்துச்சீலை அதே இடத்தில் இருக்கின் றது. விலகவில்லை,'' என்று தொண்டை நோவுக்குப் போட்டிருந்த மருந்துச் சீலையைக் காட்டிச் சொன்னாள். தான் நித்திரை செய்யும்போது மருந்துச் சீலை வில கியபடியால் அதனை எடுத்துத் தொண்டையிற் போட நான் கை கொண்டுவந்ததாக எண்ணினாள், அப் பெண் பேதை! ''தொண்டை நோவினால் என் மனைவி இறந்தாள்'' என்று சொல்லி உலகத்திடமிருந்து தப்ப

நான் சூழ்ச்சி செய்ததை அவள் அறியாள். அன்று தொடக்கம் என் கல்நெஞ்சம் சற்றே இளகியது. அன்புஇல்லா விட்டாலும் அவள் அருகிற் சென்று அவள் தலையைப் பத்து நிமிடத்திற்கு ஒருமுறை தொட்டுப் பார்ப்பேன். காலை வருடிவிடுவேன். "அது வேண்டுமோ? இது வேண்டுமோ?", எனக் கேட்பேன். அவளும், நான் கண்ணும் கருத்துமாகத் தன்னைப் பார்ப்பதாக எண்ணி ஏமாந்தாள்.

# கிழக்கு வெளித்தது

என்னுடைய மனைவியின் சுகவீனத்தின் பின்னர் சுமார் இருபத்தைந்து நாட்கள் சென்று மறைந்து விட்டன. நான் வெளியே போய்விட்டு ஒரு நாள் உள்ளே திரும்பும்போது என் மனைவி பேசும் குரல் கேட்டது. எனவே வெளிப்புறத்திலிருந்து ஒட்டியிருந்து கதையைக் கேட்டேன்.

"என்னுடைய அவர் தெய்வப்பிறவி. என்மீது கண்ணுங்கருத்துமாக இருக்கின்ருர். எனக்கு இப்போது வருத்தமில்லை; ஆனால், அவர் என்மீது அளவு கடந்த அன்பினுற் செல்லங்காட்டுவதுதான் வருத்தம்", என்று பகடியாகப் பெருமையுடன் கூறினுள்.

அதற்கு மறுமொழியாக, "கடவுளே! என்னுடைய ஐயா மிகவும் நல்லவர்," என்றது ஒரு குரல்.

அது அலிசின் குரல் என்பதை உடனே அறிந்து கொண்டேன். உள்ளே செல்லும்போது என் உள்ளத்தில் பழைய நெருப்பு மீண்டும் எரியத் தொடங்கியது. அந்தக் கேள்விகளுக்கு, அலிசுக்குச் சவுக்கடி என்ருலும் போட்டு மறுமொழியை வலிந்து பெறுவதென எண்ணினேன். உள்ளே போனதும் என் உள்ளம் திடுக்கிட்டது. வருத்தமாக இருந்த என் மனைவி முக ஒளியைத்

திரும்பவும் பெறுகின்றாள். ஆனால் அலிசின் முகம், புகைப்பிடித்துத் துடைக்காத கண்ணாடி விளக்குப் போல ஒளி குறைந்து மங்கலாக இருந்தது. என்னுடைய கோபம் சிறிது மாற உள்ளம் சற்றே கசிந்தது.

"சும்மா பார்த்துவிட்டுப் போகலாம் என எண்ணி வந்தேன் ஐயா! எனக்குச் சுகமில்லை", என்றாள் அலிசு.

"அப்படியோ?," எனக்கேட்டுவிட்டு பட்டாரென என் அறைக்குட் போனேன்; போயிருந்த சில நிமிடங்களுக்குப் பின்னர் அலிசு உள்ளே வந்தாள்.

"வெளியே போ!," என நான் சொல்ல வாயெடுக்கமுன்னர் அவள் பேசத் தொடங்கினாள்.

"ஐயா! நீங்கள் எனக்குச் செய்த உதவிகளுக்கெல்லாம் என் உளப்பூர்வமான நன்றி", என்று சொல்லி என் காலில் விழுந்து கும்பிட்டாள்.

நான் எவ்விதமான உணர்ச்சியுமின்றி மரம் போல் நாற்காலியில் இருந்தேன். அவள் எழுந்ததும் ஒரு சிறு கடுதாசிப் பொட்டலத்தை எடுத்து என் முன் வைத்து வணங்கினாள். வணங்கியதும் சிறுபிள்ளைகளைப்போல அழுதழுது சொன்னாள்:

"ஐயா, நீங்கள் என்னிடம் கேட்ட பல கேள்விகளுக்கு நான் மறுமொழி கூறவில்லை. இதோ இந்தப் பொட்டலத்தில் என்னுடைய வாழ்க்கைக் குறிப்பிலிருந்து சில பக்கங்கள் இருக்கின்றன. அவற்றை நான் அடுக்கி வைத்தபடி வாசியுங்கள். பக்கங்களிலுள்ள இலக்கங்களைப் பொருட்படுத்தவேண்டாம். கதையில் உள்ளவைபோல என்னுடைய வாழ்வு நிகழ்ச்சிகளும் இருக்கும். சிறந்த எழுத்தாளர் ஒருவரென்றால் என்னுடைய வாழ்வைப் பெரிய கதையாக எழுதியிருப்பார்; ஆனால், எனக்கு அப்படி எழுதத் தெரியாது. ஒரே

ஒரு வேண்டுகோள்; நான் சாகும்வரை இப் பொட்டலத்தை வைத்திருந்து நான் இறந்த பின்னரே வாசிக்கவேண்டும். அதற்குமுன் தொடவும்படாது. நான் கெதியிற் செத்துப்போவேன். எனக்கு வயிற்றிற் புற்றுநோய் தொடங்கிவிட்டது. சத்திர வைத்திய சிகிச்சைக்குப் பெரிய ஆசுப்பத்திரிக்குப் போகிறேன். என்னுடைய எசமானும் வற்புறுத்துகின்றபடியால் நான் சிகிச்சைக்கு உடன்பட்டேன்; ஆனால், கட்டாயம் இறப்பேன். இன்னும் ஐந்து நாட்களில் நீங்கள் இதனை வாசிக்கலாம். அதுவரையும் வாசிக்கமாட்டேன் என்று வாக்குறுதி தாருங்கள்,'' எனக் கேட்டார்.

''எச்சரிக்கை; நான் உயிரோடு இருக்கும்வரையும் இதனை வாசிக்கப்படாது,'' என அப் பொட்டலத்தின் மேலுறையிற் சிவப்பு மையால் எழுதப்பட்டிருந்தது.

அப் பொட்டலத்தை மீண்டும் இருந்த இடத்தில் வைத்துவிட்டுப் போனேன்.

இரண்டு மூன்று நாட்களாக அதனைப்பற்றி நான் எள்ளளவேனும் நினைக்கவில்லை.

# இருட்டு

ஒரு நாள் உச்சிவேளை உணவை அருந்தியபின்னர் சாய்வு நாற்காலியில் இருந்தேன். தந்தி ஒன்று வந்தது. அதனை உடனே உடைத்து வாசித்தேன்.

"அலிசு நேற்றுக் காலமானார். இறுதிச் சடங்கு என் மேற்பார்வையில் நடந்தது. உங்கள் மனைவியின் உடல்நலம் குன்றியிருந்தபடியாற் சாவுபற்றி அறிவிக்கவேண்டாமென்பது இறந்தவளின் வேண்டுகோள்-வேலுப்பிள்ளை," எனத் தந்தியில் இருந்தது. அதனை என் மனைவியிடங் கொடுத்தேன். தந்தியை வாசித்ததும் அவள் விக்கி விக்கி அழுதாள். அலிசிற்கும் எனக்கும் இருந்த உறவை அவள் அறியாள். அவள் அழுததையும் தேற்றாமல் என் அறைக்குட் சென்று கதவைப் பூட்டினேன். அப்பொழுது எனக்கு இரக்கத்திலும் பார்க்க அந்தப் பொட்டலத்தைப்பற்றி அறியவேண்டும் என்னும் ஆவலே கூட இருந்தது. அவ்வுணர்ச்சியை இப்பொழுது நினைத்தாலும் உள்ளத்திலே துக்கமாக இருக்கிறது. அப் பொட்டலத்தை உடைத்து வாசித்தேன். வாசித்து வாசித்து அழுதேன். கண்ணீர் ஆறாக ஓடியது. என்னுடைய கல் நெஞ்சம் கரைந்தது. அவளின் குறிப்புக்கள் என் உள்ளத்தை வாட்டிப் பிழிந்தன. சொற்களால் என்னுடைய உணர்ச்சியை இன்னும் விவரிக்க முடியாது.

"முதலில் வாசிக்க வேண்டியது" என அவள் ஒரு சிறு தாளில் எழுதி ஒட்டி இருந்தாள். அந்தத் தாளை முதலில் எடுத்து வாசித்தேன்.

## அலிசின் வாழ்க்கைக் குறிப்பு

பக்கம் 217 மாசி மாதம் 4ஆந் திகதி

திரு. நாகராசனும் கமலநாயகியும் தனிக்குடித் தனம் நடாத்துவதைப் பார்க்கச் சென்றேன். அந்த வீட்டிற் கால்வைத்த நேரம் தொடக்கம் எனக்குச் சொல்லமுடியாத உள்ளவேதனை ஏற்பட்டது. மரத்தைப் பிளக்க இரும்பு ஆணியை வைத்து அடிப்பது போல ஏதோ என் உள்ளத்தை அடித்துப் பிளந்தது. நான் அன்று செய்த அநீதியான வேலையைப்பற்றி எண்ணினேன். என் உள்ளத்தே இருந்த அந்தரங்க உயிர், "நீ ஒரு சண்டாளி! பாதகி!! நீலி!!", என இடைவிடாது ஏசியது. என்ன செய்வது? படுபாவியாகிய நான் செய்த பிழையை எப்படி நிவிர்த்தி செய்யலாம்? இதற்குப் பிராயச்சித்தம் உண்டோ? நான் சீரிய நோக்கத்துடன் அன்று செய்தது இன்று கோர ரூபமெடுத்துத் தாண்டவம் ஆடுமெனக் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் விட்டதுபோலவே இதுவும்.

கறந்த பால் முலையில் ஏறுது. என் பிழையை இனி மாற்றமுடியாது. எனவே, அதனை எவ்வாறு திருத்தலாம். எண்ணி எண்ணித் துருவி ஆராய்ந்து சல்லடை போட்டதில் என் உள்ளமே உடைந்து ஓட்டை

யாகிவிட்டது. சத்திர வைத்தியஞ் செய்து உடம்பி லிருந்து கால் அகற்றப்பட்டவனுக்கு உண்மையான கால் வைத்துப் பழையபடி ஓட்டமுடியாது. தடியைப் பிடித்துக்கொண்டு அவனை நடக்கச் செய்யவேண் டும்; அல்லது பொய்க்கால் கொடுக்கவேண்டும். இத் தம்பதிகள் வாழ்வும் இது. திரு. நாகராசன், கமல நாயகியிடம் அன்பாக நடக்கவில்லை. இது வெட்ட வெளிச்சமாகத் தெரிகின்றது எல்லாம் என்னுடைய பிழை. பழைய எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்ருகப் புற்றீசல்போல வந்தன. உள்ளம் ஊசலாடியது. கெடுக என் ஆயுள். நான் இருந்தென்ன? இறந்தென்ன? எனக்கு எல்லாம் ஒன்றுதான்.

பக்கம் 218 மாசி மாதம் 5ஆந் திகதி

நேற்று இரவு முழுவதும் நான் கண் மூடவில்லை. அரத்தைக்கொண்டு இரும்பை அராவுவதுபோல என் உடம்பு முழுவதும் ஒருவித உணர்ச்சி பரவியது. காலையில் தலையிடியுடன் எழுந்தேன். எழுந்ததும் துப் புத் துலக்குபவன் தன் அலுவல்களைக் கூர்ந்து அவ தானிப்பதுபோல நானும் அத் தம்பதிகளைக் கூர்ந்து அவதானிக்கத் தொடங்கினேன். புயலில் அகப்பட்ட கப்பலைக் காப்பாற்றுவதற்காகக் கப்பலோட்டி முயற்சி செய்வதைப்போல அவர்களுடைய வாழ்வைக் காப் பாற்ற நான் போட்டிருந்த திட்டங்கள் தேவையில்லை என இன்று அறிந்தேன். திரு. நாகராசன் கமல நாயகியிடம் அன்பாக நடக்கவில்லைத்தான். இது பற்றி அப் பெண்ணுடன் நான் பட்டதும் படாததும் மாக விஞவினேன்.

அதற்கு எசமாட்டி சிரித்துவிட்டு, "அவர் சற்றே முரடாகத்தான் இப்பொழுதும் இருக்கிருர். அதற் காக நான் வருத்தப்படமாட்டேன். நாளடைவில் அவர் திருந்துவார். இந்த மாற்றம் நிகழவேண்டு

மென நான் கடவுளைக் கும்பிடுகிறேன். எது எப்படி இருந்தாலும் அவர் நல்லவர். இதில் ஐயமில்லை,'' என்றாள்,

அப்பாடா! என்னுடைய பாரம் ஒரு சிறிது குறைந்தது. தன் கணவனின் மாறான குணத்தை அறிந்துகொள்ளாமல் இருந்தது இப் பெண் தெய்வம். இப்படியல்லவோ பெண்கள் இருக்கவேண்டும். தான் உளப்பூர்வமாகக் காதலித்த ஒருவரிடம் குறை குற்றங்களைக் காணமுடியாதுதானே? இருந்தும் என் பிழை என்னை உறுத்தியது. இருப்புக்கொள்ளாமல் அவ்விடத்தை விட்டுப் பிடிவாதம் பிடித்துக்கொண்டு வெளியேறினேன்.

பக்கம் 118. மார்கழி மாதம் 15ஆந் திகதி

திரு. நாகராசன் வந்து நான்கு நாட்களாகிவிட்டன. கமலநாயகியின் நடத்தை ஒருவாறு இருந்தது. அப் பேதைப்பெண் என்னிடம் எல்லாவற்றையும் சொன்னாள். நான் என்ன செய்யலாம்? எனக்கோ அக் குடும்பத்தில் எவ்விதமான செல்வாக்குமில்லை. நாகராசன் என்மீது காதல் புரிகின்றார். இதைப் பார்த்து அழுவதோ, சிரிப்பதோ?

மார்கழி மாதம் 16ஆந் திகதி

சூழ்ச்சிதான் இதற்கு மருந்து. பாவம், புண்ணியம் எல்லாம் ஒருபுறமிருக்கட்டும். இன்று திரு. நாகராசன் என்னைத் தென்னந்தோப்பிற்கு வரச்சொன்னார். நல்ல சமயம் இது. இதனைத் தவறவிடக்கூடாது. கமலநாயகி என்னைத் தூதாக அவரிடம் செல்லும்படி கெஞ்சி மன்றாடினாள். அவரிடம் செல்வதாக நான் வாக்குக் கொடுத்தேன். அவரை இன்று அறையிற் கண்டபோது இதுபற்றி நான் ஒன்றுமே பேசவில்லை. அவர் குளறி

யடித்துப் பேசுகையில் நாத் தழதழத்தது. கடைசியாக இன்று பிற்பகல் என்னைத் தென்னந்தோப்பில் வந்து காணும்படி கூறினர். கமலநாயகியிடம் போய்த் தட்டாமல் முட்டாமல் ஒரு பொய் சொன்னேன்.

"இன்று உங்களைத் தென்னந்தோப்பிற் காண அவர் விரும்புகிருர்," என்றேன்.

இளங் கன்றுபோலக் கமலநாயகி மகிழ்ச்சி மிகுந்து துள்ளித் துள்ளிக் குதித்தாள். இப்பெண் நான் வந்த நாள் தொடக்கம் என்னிடம் அளவுகடந்த அன்பு பாராட்டி வருகின்ருள். எனவே அவளுக்கு உதவி செய்வதும் அரும்பணிதானே!

பக்கம் 119 மார்கழி மாதம் 17ஆந் திகதி

முதல்நாள் சந்தித்தோம். அவருக்கு என்மீது கண்; ஆனல் கமலத்தின் ஏக்கத்தை அறியார் அவர். எனக்கு இப்பொழுது இரண்டு பொறுப்பான வேலைகள் வந்துவிட்டன. அவை இரண்டும் என் உள்ளத்தை உறுத்துகின்றன. முதலாவதாக அவருடைய பிடியில் இருந்து நான் தப்பவேண்டும். அவர் என் வாழ்வைத் துலங்கவைத்த சீமான். கமலம் பெண் தெய்வம்; அன்புகாட்டி என்னை மகிழ்ச்செய்யும் குலக்கொம்பர். ஆகா! என்ன சோடி! இருவரையும் பேசச்செய்வதற்குப் பெரும் பருந்தைச் சுடும் யோசனையை எடுத்தேன். என்னுடைய திட்டம் வெற்றிகரமாக முன்னேறுகின்றது. இதனை நினைக்க எனக்குப் பெரும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. பெரிய இராசதந்திரிகளெல்லாம் என்னிடம் பிச்சை வாங்கவேண்டும்.

மார்கழி மாதம் 20ஆந் திகதி

இன்று சந்தித்தோம். பழைய பல்லவிதான்! இந்த மனிதனுக்குக் காதலில் ஏடுதொடக்கி அரிவரிப் பாடம்.

சொல்லிக் கொடுக்கவேண்டும். இதற்கிடையில் என் உள்ளப்பாரம் ஒருபுறம் இருக்கின்றது. நெஞ்சு வெடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. நான் இப்பொழுதே இறந்தால் நல்லது. ஆனால், இந்தத் திருமணத்தை நிறைவேற்றும் வரையும் உயிர் வாழவேண்டும்.

இன்று பெரும் பொய் ஒன்று சொன்னேன். கடவுள் மன்னிப்பாராக! 'ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணஞ் செய்துவை,' என்பது ஒரு பழமொழி. இரவில் என்னைக் காணும்படி சொன்னேன். கமலநாயகி நாணிக் கோணி முகஞ் சிவந்து நின்றாள். பெருமூச்சுவிட்டு என் நெஞ்சுப் பாரத்தை மூக்கு ஓட்டையினால் ஊதி வெளியே தள்ளினேன். இரவு பத்து மணிக்கு இருவருஞ் சந்தித்தனர். கமலத்தைக் கேட்டதிலிருந்து அவர் சற்றே ஐயப்படுகின்றார் என ஊகிக்க இடமுண்டு. கமலநாயகி என்னுடைய நடவடிக்கைகளைப்பற்றி ஒன்றுமே தெரியாமல் இருக்கின்றாள்.

பக்கம் 120 மார்கழி மாதம் 21ஆந் திகதி

இன்றுதான் என்னுடைய நாடகம் உச்சநிலையை அடைந்துள்ளது. கமலநாயகியைக்கொண்டு ஒரு காதற் கடிதம் எழுதுவிக்க நான் பட்டபாடு! அப் பெண்ணின் முகஞ் சிவந்தது. கையும் நடுங்கியது. இதுவன்றோ உண்மைக் காதல்! அது தோன்றுவதும் கிடைத்தற்கரிய பெரும்பேறு. இதனை நினைத்ததும் என்னை அறியாமல் என் கண்கள் நனைந்தன. கமலநாயகியின் கடிதத்தை அவரிடம் கொடுத்தேன். பாவம். அவர் நான் எழுதியதாக எண்ணினார். இப்படியாக அவர் மூன்றும் கமலநாயகி மூன்றும் காதற்கடிதம் எழுதினார்கள்.

## பக்கம் 121 மார்கழி மாதம் 23ஆந் திகதி

இன்று எனக்குப் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. என்னுடைய தலைதான் போகப்போகின்றதென்று நினைத்தேன். கமலநாயகி அவர் எழுதிய கடிதத்தை வைத்து வாசிக்கும்போது என்னுடைய எசமானி கண்டுபிடித்துவிட்டார். இவ்வளவு விரைவில் இது வெளிவருமென நான் எண்ணவில்லை. அவரிலேதான் எல்லாம் தங்கியிருக்கிறது. கடவுளே! என்னுடைய எசமர்ன் இருவருக்கும் மண ஒழுங்குகள் செய்கின்றார். திரு. நாகராசன் இதற்கு மறுத்தால் நான் என்ன செய்யலாம்? என்னுடைய சூழ்ச்சியெல்லாம் வெளி வந்துவிடும். உண்ட வீட்டிற்கு இரண்டகஞ் செய்த பாதகி என என் எசமான் ஏசுவார். அவரும் முரட்டுக் குணத்தில் என்னை அடித்தாலும் அடிப்பார். கமல நாயகியோவெனில் உள்ளம் உடைந்து ஏங்கித் தவிப்பர். இவரும் வந்து என்னுடன் ஏதோ உளறியடித்தார். உண்மையில் என்மீது அளவுகடந்த அன்புகொண்டிருக் கிறார்.

## பக்கம் 122 தை மாதம் 2ஆந் திகதி

திரு. நாகராசனுக்கும் செல்வி கமலநாயகிக்கும் திருமணம் நடைபெற்றது. நானே எல்லா வேலைகளை யும் ஓடியோடிச் செய்தேன். இது நான் எடுத்த முயற்சி. இது வெற்றிபெற்றதில் எனக்குப் பெரும் மகிழ்ச்சி நிலவியது. என்னுள்ளத்தின் அடிப்படையிற் பெரும் பாரம் ஒன்று இருக்கின்றது. திருமணத்திற்குக் குருக்கள் ஓமம் வளர்த்தார். ஓமகுண்டம் புகைவதுபோல என் உள்ளமும் புகைந்துகொண்டிருந்தது. திரு. நாகராசன் கமலநாயகியின் கழுத்திற் தாலி கட்டும்போது என் னுடைய கழுத்தை யாரோ கயிறுகட்டி இழுத்து நெரிப்பதுபோல இருந்தது. என்னுடைய பெரும்

முயற்சியினுல் என் உள்ளத்தைத் தளரவிடாமல் நடந்து கொண்டேன்.

## தை மாதம் 3ஆந் திகதி

இன்று மயக்கம் எனக்கு ஏற்பட்டது. அறிவு வர 10 நிமிடங்கள் ஆகிவிட்டன என அறிந்தேன். நான் கண் திறந்தபொழுது என்னுடைய எசமான் பேசுங் குரல் கேட்டது. "பாவம், கடுமையான வேலை செய்தாள். அத்துடன் நித்திரையுமில்லை. பெலவீனம் அதிகமாகிவிட்டது. மருந்து வாங்கிக் கொடுக்கவேண்டும்," என்ருர்; ஆனுல், நான் படும் வேதனையை அவர் அறியார். என்னுடைய இதயம் இடைவிடாது குமுறிக்கொண்டிருக்கின்றது.

## தை மாதம் 7ஆந் திகதி

புதுத் தம்பதிகள் தனியாகக் குடித்தனம் நடாத்தப் புறப்பட்டனர். எனக்கு இயமவேதனை ஏற்பட்டது. கமலநாயகியோவெனில் என்னையும் தங்களுடன் வந்து இருக்கும்படி ஒரே பிடிவாதம் பிடித்தார். திரு. நாகராசனும் என்னை வரும்படி கேட்டார். கேட்கும்போது என்னதான் நினைத்தாரோ நானறியேன். அவருடைய உள்ளத்தில் மீண்டும் பழைய எண்ணங்கள் தோன்றியிருந்தாலும் இருக்கலாம். அவர் என்மீது மட்டற்ற அன்புகொண்டிருக்கிருர். நான் கடுமையாகவும், நிதானமாகவும், கவனமாகவும் நடந்துகொண்டபடியினுல் எவ்விதமான பிழையும் ஏற்படவில்லை. அதற்கே இடமில்லை. கடவுள் காப்பாற்றினுர். நானும் அவர்களுடன் சென்று ஒரு வீட்டிலிருந்தால் என்னதான் நடக்குமோ யாரறிவார்!

கமலநாயகி உண்மையில் உத்தமி. பெண்பேதை. 'வெளுத்ததெல்லாம் பால்' என எண்ணுபவள். திரு.

நாகராசன் என்மீது கொண்டுள்ள காதலை அறியாள். தன்னுடைய காதலனை அடைவதற்கு நான் பெரும் உதவி செய்தேன் என்பது அவ்வுத்தமியின் எண்ணம்.

**பக்கம் 123 தை மாதம் 8 ஆந் திகதி**

கடவுளே! இத்தனைக்கும் திரு. நாகராசன்மீது எனக்கு அன்பு இல்லாமலில்லை. தேவையில்லாத நேரம் பூனை தன் நகங்களை இழுத்துச் சுருக்கி வைத்திருப்பது போல நானும் என் தேவையில்லாத அன்பை அடக்கி ஒடுக்கிச் சுருக்கி வைத்தேன். நான் திரு. நாகராசனைக் கண்டநாள் தொடக்கம் உள்ளப்பூர்வமாகக் காதலித்தேன்; ஆனால், என்னுடைய காதலைக் கல்மேலிட்ட கலமாக்கினேன். உள்ளத்தைக்கல்லாக்கிக்கொண்டேன். ஏன்? நான் ஏழையென்றபடியால் அல்ல. குட்டரோகம் பிடித்தவள் தான் விரும்பியவனைத் தொடமுடியாதது போல நானும் அவரைத் தொடமுடியாது, என்னுடைய வாழ்வு ஒளியில்லாத விளக்குப்போன்றது. நான் அவரை இப்பிறப்பில் மணக்கமுடியாது. "இப்பிறவி தப்பினால் எப்பிறவியோ இறைவா" என்றார் ஒரு மெய்யன்பர். இப்பிறவியை வேண்டுமென்றே தப்பவிட்டேன். அடுத்த பிறப்பு உண்டானால் அவரை நான் அடைவேன். நான் ஏன் அவரை மணக்கவில்லை என்பதற்கு மறுமொழி என்னுடைய வாழ்வு என்னும் ஏட்டைப் புரட்டினால் தெரியும்.

அன்று அவர்களுடைய படுக்கையை விரிக்கும் போது பூவேலை செய்த தலையணையுறையிலே இருந்த "க. நா." என்னும் இரு எழுத்துக்களையும் பார்த்தேன். கமலநாயகி - நாகராசன் என விளங்கியது. 'க'வுக்குப் பதில் என்னுடைய பெயர் இருக்கவேண்டுமென என் உள்ளம் துடித்தது. என் சோக வாழ்வின் வரண்ட ஏட்டுச்சட்டம் கலகலத்ததும் அந்த ஆசை பாலைவனத்துப் பனிபோல அரைநொடியில் மறைந்தது.

என்னுடைய வாழ்க்கையைச் சுருக்கமுற எழுத வேண்டும். கண்ணீரிலேதான் தொட்டு எழுதவேண்டும்.

சட்டம் 1 துக்க ஏடு

என் இளமைப் பருவத்தைப்பற்றி அதிகம் சொல்ல ஒன்றுமில்லை. நான் ஓர் அனுதை. மலைநாட்டிற் பிறந்தேன். இளமைப் பருவத்தில் என் பெற்ருேரை இழந்த அபாக்கியவதி நான். அவ்வளவு கெட்ட காலத்திற்கூட எனக்கு ஏதோ ஒரு சிறு அதிட்டம் இருந்தது. ஒருநாள் தெருவோரத்திலிருந்து பசிக் கொடுமை மிகுதியினுல் விக்கிவிக்கி அழுதேன். நான் அழுதுகொண்டிருந்த இடத்தில் ஒரு மோட்டோர் வண்டி வந்து நின்றது. பயந்து நான் எழுந்து ஓட முயற்சித்தேன்.

ஓர் ஆங்கிலக் கனவான் என்னை எடுத்துத் தூக்கி ''யேங் அலுகிருய்?'' என்று பரிவுடன் கேட்டார்.

நான் ஓர் அனுதை எனவும், என்னுடைய பாட்டன் ஒருவரிடம் இருக்கிறேன் எனவும் சொன்னேன்.

உடனே அவர் என்னை மோட்டோர் வண்டியில் ஏற்றி ''பாட்டங் வூட்டு வலி காட்டு'' என்ருர்.

மோட்டார்வண்டியிலேறிச் சமீபத்திலுள்ள என் பாட்டன் வீட்டிற்குச் சென்றேன். என்னை வீட்டு வேலை செய்வதற்காகத் தன்னுடன் அனுப்பமுடியுமோ என்று அந்த ஆங்கிலச்சீமான் பாட்டனிடங் கேட்டார். பாட்டனுக்குப் பெரும் மகிழ்வு உண்டாயது. உணவிற் காகத் தான் திண்டாடும்போது என்னையும் வைத்து உணவு தர அவரால் எப்படி முடியும்?

எனவே, மகிழ்ச்சியுடன் என் பாட்டன் என்னை ஆசீர்வதித்து, ''பொய், களவு இல்லாமல் நேர்மையாக

வாழ்ந்து நல்ல பெயர் எடுக்கவேண்டும். எக் காரணத்தையிட்டும் நேர்மை தவறக்கூடாது. எவருட னும் கோபிக்கக்கூடாது,'' என்று புத்திமதி கூறி அனுப்பி வைத்தார். அந்தச் சொற்கள் இன்றும் என் காதில் இருக்கின்றன.

நான் போன இரண்டு மூன்று மாதங்களுக்குப்பின் என்னுடைய பாட்டனும் காலமானுர். என்னுடைய ஆங்கிலக் கனவானைத் தவிர எனக்கு வேறு யாருமில்லை இவ்வுலகில். அவரின் பெயர் திரு. சிமித். பத்து ஆண்டு களாக அவரின் குடும்பத்தில் நான் இருந்தேன். அவர் என்னைப் பள்ளிக்கு அனுப்பினுர். தமிழ் நான்கும் ஆங்கி லம் ஒரளவிலும் என்னைக் கற்க வைத்தார். அவருடைய பிள்ளைகளைப் பார்ப்பதும், அவரின் மனைவியின் ஏவல் களைச் செய்துமுடிப்பதுமே என் வேலை.

என்னுடைய கெட்டகாலம், முயலை வேட்டைநாய் துரத்துவது போலத் துரத்தியது. துரை சிமித் இறந் தார். இரத்தாசயம் நின்று மரணம் ஏற்பட்டது. இள கிய இருதயம் படைத்த இவருக்கா இந்த நோய் வரவேண்டும்? அவர் இறந்த பின்னர் அவரின் மனைவி யாரும், பிள்ளைகளும் இங்கிலாந்துக்குச் செல்ல ஆயத் தஞ் செய்தனர். மீண்டும் நான் உறுதுணையற்ற அனுதையானேன். அவர்கள் புறப்படுமுன்னர் திருமதி சிமித் என்னைக் கூப்பிட்டுப் பல புத்திமதிகள் கூறினுர்.

அதன் பின்னர் எனக்கு இருநூறு ரூபாய்களைத் தந்துவிட்டுச் '' செலவிற்கு வைத்துக்கொள்; உனக்கு நல்ல ஒரு வீட்டில் வேலை எடுத்துத் தருகிறேன்,'' என்ருர்.

திருமதி சிமித் கூறியபடி எனக்கு வேறெருரு வீட் டில் வேலை கிடைத்தது.

திரு. சிமித்தை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். எனக்கு அவர் கல்வி கற்பித்ததுமல்லாமல் அன்பாக

வும் என்னை நடத்தினர். அது மட்டன்று; நான் ஓய்வாக இருக்கும் நேரங்களில் பல நீதிமொழிகளை யும் அவர் எடுத்துக்கூறி விளங்கவைப்பார். முதலாவ தாக எனக்கு ஆழ்ந்த சமயபக்தியை என் உள்ளத்திற் படியச் செய்தார். ''தெய்வம் ஒன்றே ஒன்று. அது உண்டே உண்டு'', எனச் சொல்லித் தந்தார். அநீதி, பொய், களவு, காமம், லௌகீகம் ஆகியவை முட்டி மோதுகின்ற இவ்வுலகு நைந்து கிழிந்து இருக்கின்ற தெனவும் அதனை உய்யவைக்க ஆத்மீகமே வேண்டி யது எனவும் பலமுறை எனக்கு எடுத்துக் கூறியுள்ளார். பெண்களாகப் பிறந்தவர்கள் கற்பைப் போற்றிப் பேண வேண்டுமென்னும் மெய்ப்பொருளை அவர் தகுந்த மேற்கோளுடன் எடுத்துக்காட்டி விளங்கவைப்பார். கற்புக்குத் திண்மை மிக உடைத்து எனவும் அவர் கூறு வார். ஒருநாளுக்கு ஒருமுறை என்றாலும் அவர் என் னிடம் கற்பைப்பற்றிக் கூறுவார்.

நான் புதிதாகப் போன வீட்டிற் சூழ்நிலை வேறு மாதிரி இருந்தது. அந்த வீட்டில் உள்ள துரை மிகவும் செல்வம் படைத்தவர். அத்துடன் நல்ல அழகனும். செல்வமும் அழகும் இருந்தால் அவ்விடத்தில் கற்பு தலைநிமிர்ந்து நிற்பது முயற்கொம்புதான். ஏன்? அழகு தனியே இருந்தாலும் பெரும்பாலும் இதே கதைதான். அவர் என்னைக் கெடுக்கத் திட்டஞ்செய் திருந்தார் என்பதை ஒருவாறு மட்டிட்டு அறிந்தேன். சுருங்கச் சொன்னாற் சுவரிலிருந்து விளக்கொளிக்கு வரும் பூச்சியைப் பிடிக்க வாலைவாலை ஆட்டும் பல்லி போலத்தான் அவரும். பெரும்பாலும் பெண்களும் ஆண்களும் இப்படியானவர்களென வாழ்வின் பிற் பகுதியிலேயே அறிந்தேன்.

எனக்கு அந்தவீடு ஒரு நரகக்குழிபோல இருந்தது. ஒருநாளிரவு படுத்திருக்கையிற் பலவாறு எண்ணி னேன். ''உலகம் பரந்தது. அதிலிருக்க நல்ல ஒரு

இடம் எனக்கு எங்காகிலும் இருக்கும்,'' என்று எண்ணி மனப்பால் குடித்து அவ்விடத்தைவிட்டு எவருக்குஞ் சொல்லாமல் ஓடினேன். இந்த உலகம் பரந்ததுமல்லாமல் சண்டாள நீச உலகம் என்பதையும் பின்னர் அனுபவ வாயிலாக அறிந்தறிந்து களைப்புற்றுச் சோர்ந்தேன்.

என்னுடைய பெற்றோர்கள் தேயிலைத் தோட்டத்துக் கூலிகள். அதே தொழிலில் இறங்க நானும் எண்ணி வேலை தேடினேன். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை. ஒரு மாதகாலம் அந்த வேலையிலிருந்தேன். வெய்யில், மழை படாமற் சௌகரியமாக வீட்டுக் கூரையே ஒதுக்கிடமாக வாழ்ந்த எனக்குக் கொட்டு மழையிலும், எரிக்கும் வெய்யிலிலும் நின்று வேலைசெய்ய முடியவில்லை. அந்த ஒரு மாதகாலத்திலும் பதினெட்டு நாட்கள் நான் வேலைக்குப் போகவில்லை. எனவே, என்னை வேலையினின்றும் நீக்கிவிட்டார்கள். அழுதேன்; கும்பிட்டேன்; பயனில்லை. ''வேலையை விட்டுப் போ,'' என்று கட்டளை பிறந்தது.

என்பாடு மீண்டும் தொல்லையாகிவிட்டது. ஆற்று ஓட்டத்தை எதிர்த்து நீந்தும் ஒருவர்போலத்தான் என் வாழ்வும். வாழ்விலேற்படும் பல இன்னல்களில் இருந்தும் தப்பி நீந்திக் கரை சேர்வதென உறுதி கொண்டேன். ஒரு கிழவி என்னிடம் சற்றே பழகி வந்தாள். அவளுடைய வீட்டிலேதான் நான் தங்கினேன். திருமதி சிமித் பயணஞ் செல்லுமுன் எனக்குத் தந்த காசுதான் உணவுச் செலவுக்கு உபயோகப் பட்டது.

என்னைப்பற்றி நினைத்தேன். என் விதியைப்பற்றி எண்ணினேன். தங்க இடந்தராத இச் சண்டாள உலகத்தைப்பற்றி நினைத்தேன். ஒதுக்கிடமாக மூலையொன்று தேடி அங்கிருந்து விக்கி விக்கி அழுதேன். ஏழையைக் கண்டு ஏழைதான் இரங்கமுடியும். பணத்

திமிர் பிடித்தவர்களுக்கு ஏழையின் ஏக்கம் எப்படித் தான் புலனுகும்! கிழவி வந்து எனக்கு ஆறுதல் சொன்னுள். என்னுடைய வாழ்க்கை வரலாற்றை அவளுக்குச் சொன்னேன்.

"ஆங்கிலம் தெரிந்த நீ பிள்ளைகளைப் பார்க்கும் தாதி - அதாவது ஆயாளாக இருக்கலாமே?" என யோசனை கூறினுள்.

அம் மொழிகள் எனக்குக் காதில் இன்னிசை போன்று இருந்தன.

வேலைதேடும் படலம் மீண்டும் தொடங்கியது. நான் வேலை தேடிப்போன முதல் வீட்டிலிருந்து வேலை இல்லை என்று 'பளீர்' என மறுமொழி வந்தது. இந்தப் பணக்காரருடைய வீட்டிற்குட் போகவே எனக்குப் பயம் வந்தது. நான்காவது வீட்டிற்குப் போனேன். அங்கிருந்து ஒரு நாய் "வள், வள்" எனக் குரைத்தது. செல்வர் வீட்டு நாயென்ருல் அதுவும் செல்வர்களைப்போலச் செருக்குற்றிருக்குந் தானே! படலையில் ஒரு பணியாள் நின்ருன்.

அவனை நோக்கி, "ஆயா வேலைக்கு ஆள் வேண்டுமோ? அம்மாவைக் கேட்டுச் சொல்", என்றேன். அவன் உள்ளே போனுன். அந்த அம்மாவிடம் ஏதோ சொன்னுன். அம்மாவின் குரல் மாத்திரம் கடூரமாக இருந்தது. ஒரு பெண்ணுக்கு மற்ருெரு பெண் இரக்கங் காட்டவேண்டாமோ?

"என்ன பெயராம் அவளுக்கு?" என்ருர் அந்த அம்மா.

பணியாள் வந்து, "என்ன பெயர் உனக்கு? அம்மா கேட்கச்சொன்னுர்," என என்னைப் பார்த்து அதட்டினுன்.

மென்று விழுங்கியபடி, "மீனாட்சி," என்றேன்.

அந்தப் பெயரைக் கேட்டதும் அந்த எசமானி, "பெயரைப் பார்த்தால் பட்டிக்காட்டுப் பெயர்போல் அல்லவோ இருக்கிறது. உவளுக்கு வேலைபார்க்க எங்கே தெரியப்போகின்றது! வேண்டாம் போகச் சொல்" என்றாள்.

அழுதழுது கண் சிவந்தது. அக் கிழவியிடம் போய் எல்லாவற்றையும் சொல்லி அழுதேன். "நீ தொழிலுக்குப் புதிது. மீனாட்சி என்பதை நல்ல நாகரிகமான பெயராக மாற்று என்றாள் அக் கிழவி.

## சட்டம் 2 அந்த ஆறு ஆண்டுகள்

எனக்கு மீனாட்சி என்ற பெயரில் நல்ல விருப்பம். திரு. சிமித் என்னை "மீனாட்டி" எனக் கூப்பிடுவார். அதனைக் கேட்கவும் எனக்கு ஒரு தனி விருப்பம் உண்டு. சரி, பெயரையும் மாற்றிவிட்டேன். அன்று தொடக்கம் மீனாட்சி அலிசு ஆனாள். உண்மையாக மீனாட்சியும் அன்றே இறந்துவிட்டாள். அடுத்த ஆறு ஆண்டுகளும் எனக்கு மிகவும் சோதனைக்குரிய காலம். வாழ்விற் கதிகலங்கித் தவித்தேன். இந்த ஆறு ஆண்டு களும் மிகக் கொடியவை. எள்ளில் உள்ள நெய்யைப் பிழிந்து வெளியே தள்ளிவிட்டுச் செக்குத் தன்னுள் பிண்ணாக்கை வைத்திருக்கும். அதேபோல அந்த ஆறு ஆண்டுகளும் என் வாழ்விலுள்ள நல்லவற்றைப் பிழிந்துகொண்டு தீயவற்றை உள்ளே அடைத்துவைக் கச் செய்தன.

முதல் ஐந்து ஆண்டுகளில் எட்டு இடங்களில் வேலை பார்த்தேன். என் சம்பளத்தை மிச்சம்பிடித்துச் சுமார் அறுநூறு ரூபாக்கள் வைத்திருந்தேன். இதனை விட இந்த ஆறு ஆண்டுகளும் எனக்கு எவ்விதமான

நன்மைகளையும் தரவில்லை. தீமையையே மலைபோற் கொண்டுவந்து குவித்தன.

பணக்காரவீட்டுப் பிள்ளைகளுக்கு ஆயாவாக இருப்பது மிகமிகத் தொல்லையான வேலை. அப் பிள்ளைகள் மீது அன்பாக இருந்தாலும் அவர்கள் என்னிடம் அன்பாக இருக்கமாட்டார்கள். என்னை அடிப்பார்கள்; கடிப்பார்கள்; உதைப்பரார்கள்; குத்துவார்கள். இவ்வளவையும் நான் பொறுத்து நடக்கவேண்டும். இதுவும் போதாதென்று தங்கள் தாய்மாரிடஞ் சென்று நான் அப்படிச் செய்தேன், இப்படிச் செய்தேன் எனக் கோள்மூட்டுவார்கள். அந்த அம்மாமாரும் என்னை ஏசுவார்கள். நாயாகப் பிறந்தாற் குரைக்கத்தானே வேண்டும்? பின்னர் வீணை வாசிக்கமுடியுமோ? ஒரேயொரு பிள்ளை மாத்திரம் என்மேல் உயிரை வைத்திருந்தது. இதனைக் கண்ட அதன் தகப்பனார் தன் மனைவியைக் கூப்பிட்டார்.

''ஆயா இருப்பதனாற்றான் பிள்ளை உன்னை மறக்கின்றது. ஆயாவைக் கட்டிப்பிடித்துக்கொண்டிருக்கின்றது. பிள்ளை வளர்ந்துவிட்டது. ஆயாவை வேலையில் இருந்து நீக்கு. அப்பொழுதுதான் பிள்ளை எங்களுடன் வந்து சேரும். எங்களில் அன்பு வைக்கும்,'' என்றார்.

என்னுடைய சம்பளத்தைத் தந்து என்னை வேலையிலிருந்து நீக்கினார்கள். என்னைப் போகவிடாது அப் பிள்ளை கட்டி அழுதது. அதனுடைய தாயார் என்னிடம் இருந்து அதனைப் பிடுங்கி எடுத்தார். நான் வெளியேறினேன். அப் பிள்ளை பரிதவித்த காட்சி என் மனத்தை விட்டகலவில்லை. இதுதான் எனக்கு வாழ்வில் ஒரு முக்கியமான படி.

என்னுடைய உடம்பு இளமைக்கேற்றபடி மிகவும் முறுக்காக இருந்தது. என்னிடம் அதிக அழகு இல்லாவிட்டாலும் ஒருவிதமான தனிக் கவர்ச்சியுண்டு.

இதுவும் எனக்குத் தெரியும். நான் வேலைபார்த்த இடங்களிலுள்ளவர்கள்கூட இதனை எனக்குப் பலமுறை கூறியிருக்கிறார்கள். கடவுளே! என்னுடைய கற்பை நான் காக்கப் பட்டபாடு உனக்கல்லவோ தெரியும்.

பல ஆண்டுகளாக மற்றவர்களுடைய பிள்ளைகளைத் தூக்கித் தூக்கித் தோள் காய்த்துள்ளது. பிறருடைய பிள்ளைகளைத் தாலாட்டிச் சீராட்டி என்ன பயன்? ஆனால், எனக்கென்று ஒரு பிள்ளை இருந்தால் எவ்வளவு நல்லது என எண்ணினேன். இந்தக் கனவை நனவாக்கலாம் என்பது அப்பொழுது எனக்கிருந்த பேரவா. "அம்மா" என்று என்னை அழைக்க எனக்கொரு பிள்ளை வேண்டுமென என் உள்ளம் துடித்தது. பிறருடைய பிள்ளைகளை வளர்த்து எனக்கு நன்றியில்லை. அதிலும் பணக்காரவீட்டுப் பிள்ளைகள் கேவலம் என்னை ஒரு கழுதை - தங்களைச் சுமக்கும் கழுதை - என அவமதித்தார்கள். அந்த ஏக்கத்தினால் ஒருவனைக் கைப்பிடித்துக் கல்யாணஞ்செய்து தம்பதிகளாய் வாழ வேண்டுமென விரும்பினேன். அப்பொழுது என்றாலும் என்னுடையது என்று சொல்ல ஒரு பிள்ளை இருக்குந்தானே? பிள்ளைப்பாசம் மேலிட்டது.

இதே நேரத்தில் என்னைப்போன்ற ஒரு ஏழை என்னைச் சுற்றி வட்டமிட்டான். மணவாழ்வு, அதனால் வரும் பிள்ளைச் செல்வம் என்பவற்றை எண்ணி அவனுடன் பழகிவந்தேன். அவனும் என்னைக் கைவிட்டு ஓடினான். அப்பொழுது அவனிடம் பட்ட அடிகாயந்தான் இப்பொழுதும் என் நெற்றியில் இருக்கின்றது.

என்னுடன் அன்பாகப் பழகும் அந்தக் கிழவி - தங்கப்பாட்டி - எனக்குத் தேறுதல் சொன்னாள்.

"உந்த எண்ணத்தை விடு பிள்ளை. காதலாவது கருங்கல்லு பிளப்பதாவது! எங்களைப்போன்றவர்

களுக்கு இதெல்லாம் இருக்கப்படாது. என்னுடைய தூரத்து உறவினன் ஒருவன் இருக்கின்றான். வண்டிக் காரன் அவன். தனக்குக் கல்யாணஞ்செய்து வைக்கும் படி கேட்டுத் திரிகின்றான். குணம் நல்லது. நல்ல உழைப்பும் உண்டு. என்ன சொல்கின்றாய்?'' என்றாள் தங்கப்பாட்டி.

முன்பின் யோசிக்காமல் ''ஓம்'' என்றேன். இருவரும் கிழவி வீட்டில் சந்தித்தோம். ஐந்து ஆறு நாட்களுக்குப் பின்னர் எங்களுக்குக் கலியாணம் நடந்தது. ஐயர் வந்து எல்லாம் சைவமுறைப்படி செய்தார். என்னுடைய இரண்டாவது கணவனாகிய வண்டிக்காரனுக்கு என் முன்னைய வரலாறு தெரியாது. எனவே என்மீது மிகவும் அன்பாக இருந்தார். உண்மை யில் மிகவும் நல்லவர் அவர். என்னை எவ்வித குறையு மின்றி வைத்திருந்தார். என்னுடைய அறுநூறு ரூபாக்களையும் அவரிடம் கொடுத்தேன். அவற்றை அவர் என்னுடைய பெயரிலே தபாற்கந்தோர் சேமிப்பு வங்கியிற் போட்டுவைத்தார்.

உண்மையில் நான் மகிழ்ச்சியாக இருக்கவில்லை. அவருக்கு மரியாதை செய்தேன்; ஆனால் ஏனோ தெரியாது உளப்பூர்வமான அன்பு காட்டமுடியவில்லை. அதனை நினைக்க எனக்கே என் குற்றம் விளங்கியது. அன்பு காட்டுவதாக நடித்தேன். அந்தப் பாசம் நேசம் என்னும் பாசாங்கிற்கு ஏற்ற தண்டனை கிடைத்தது. அவருக்கு நெருப்புக்காய்ச்சல் வந்தது. படுத்தவர் எழும்பவில்லை. சுமார் 3000 ரூபா பெறுமதியான பொருட்களும் வண்டி மாடுகளும் அவரிடம் இருந்தன. சாவதற்கு மூன்று நாட்களின் முன்னர் தன்னுடைய நண்பன் ஒருவனைக் கூப்பிட்டு அவைகளை விற்கச் சொன்னார். ''நீங்கள் தப்புவீர்கள். வேண்டாம். வேண்டாம்,'' என அழுது சொன்னேன். அவர் கேட்க வில்லை. 1500 ரூபாவைக் கிழவிக்குக் கொடுத்தார் மற்ற 1500 ரூபாவை என்னுடைய பெயரில் தபாற்

கந்தோரிலே கொடுத்தார். அவரை நான் மறக்க மாட்டேன்; ஆனால் ஏனோ தெரியாது, அவரில் நான் காதல் கொள்ளவில்லை. அதற்கேற்ற தண்டனையை நான் வாழ்நாளில் அடைந்துவிட்டேன்.

அவர் செத்தபின்னர் மூன்று மாத காலமாகச் சும்மா இருந்தேன். பலர் என்மீது கெட்ட எண்ணங் கொண்டார்கள். இவைகளிலிருந்து தப்புவதற்கு மீண்டும் ஆயாவானேன். என்னுடைய திடசங்கற்பம், கற்பின் திண்மை எல்லாம் காற்றோடு பறந்தன. அவைகளை நான் பேணியிருந்தால் திரு. நாகராசனிடம் உண்மையைச் சொல்லி அவரை மணஞ்செய்ய எண்ணியிருப்பேன்; ஆனால் அதனை எண்ணக்கூடாத அளவிற்குக் கெட்டேன் நான். மீண்டும் ஆயாவாகச் சென்ற இடத்திற் சனியன் என்னைப் பிடித்தது. அந்த வீட்டு எசமானனுடன் முறைதவறி நடக்க மறுத்தேன். அதற்குப் பழிவாங்கினார் அவர். நான் களவெடுத்ததாகக் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடர்ந்தார். எனக்கு ஆறு மாதம் கடுங்காவல் கிடைத்தது. நீதிபதியை மன்றாடினேன். என் எசமானின் கெட்ட எண்ணத்தைக் கூறினேன். என்னை ஒருபொருட்டாகக் கருதவில்லை. சட்டத்தின் இருதயம் கருங்கல்லுத்தானே? நான் மறியலுக்குப் போனேன். ஆறுமாத காலத்துக்குப் பின்னர் விடுதலைபெற்றேன். மூன்று மாதம் அந்தக் கிழவியுடன் சும்மா இருந்தேன். இந்தக் காலத்திலேதான் நான் முற்றாக முறைதவறிப் பிழையாக நடந்தேன். சாராயம் குடிக்கவும் பழகிவிட்டேன். ஒருநாள் சாராயம் குடித்துவிட்டு வெறியாக நின்று கெட்ட பேச்சுக்களைப் பேசினேன். பொலிசார் என்னைப் பிடித்து அடைத்தார்கள். மீண்டும் என்மீது வழக்குத் தொடரப்பட்டது. மூன்று மாதம் எனக்கு மறியல் கிடைத்தது. இந்தமுறை குற்றமற்றவள் நான் என மன்றாடவில்லை. விலக்கமுடியாத விதி என மறியலை ஏற்றுக்கொண்டேன்.

திருத்தமுடியாத குற்றவாளி என என்னுடைய பெயர் எங்கும் அடிபட்டது. மறியலிலிருந்து வெளியேறியதும் ஓரேயொரு திடமான சங்கற்பஞ் செய்துகொண்டேன். அதாவது இனி இப்படியான கெட்ட வழக்கங்களில் ஈடுபடுவதில்லை என்று உளத்தை உறுதி செய்தேன்; ஆனால் என்ன ஏமாற்றம்! நேர்மையாக வாழ்ந்து கற்பைக் காப்பாற்ற முயற்சித்த எனக்கு இந்த அகண்ட உலகில் அப்பொழுது இடமில்லை. நேர்மை தவறியபின் திருந்தி நடக்க இந்தப் பரந்த உலகில் எவ்வித வசதியுமில்லை. எந்த அரும்பாடுபட்டாலும் இனிப் :பிழை விடுவதில்லை என்பது என் குறிக்கோள். என்னிடம் சுமார் 2000 ரூபாக்கள் இருந்தன. அந்தக் காசை வைத்துக்கொண்டு மூன்று மாதகாலம் அக் கிழவியுடன் வசித்தேன்.

என்னைச் சமூகம் ஏற்க மறுத்தது. இதுதான் சண்டாள உலகம். எத்தனையோ இடங்களில் வேலை தேடி அலைந்தேன். ஒருவருமே என்னை வேலைக்கு எடுக்கவில்லை. எனக்கு இவ்வுலகில் ஆதாரமாயிருந்த அக் கிழவியும் காலமானாள். அக் கிழவியும் சாகமுன்னர் 600 ரூபாக்களைத் தந்தாள். சுமார் 30 கட்டை தூரத்திலுள்ள வேறு ஒரு நகருக்குச் சென்றேன். 'யானை வருமுன்பே மணியோசை வரும்' என்பார்கள். நான் அந்த ஊருக்குப் போகுமுன்னரே என்னுடைய பெயர் அங்கு எவ்விதமோ சென்றுவிட்டது. எனக்கு அங்கும் வேலை கிடைக்கவில்லை. அடுத்தநாள் அங்கிருந்து ஐந்து கட்டை தூரத்திற்கு அப்பாலுள்ள ஒரு நகரத்துக்குச் சென்று வேலையில் அமர்ந்தேன். ஒன்றரை மாதமாக அந்த வீட்டிலே வேலை செய்தேன். ஒருநாள் அந்த வீட்டு எசமான் என்னைத் தனிமையாகக் கூப்பிட்டார். அவருடைய நோக்கம் பிழையானது என எண்ணிப் பயந்து பயந்து அவரிடம் சென்றேன். மீண்டும் தவறி நடக்க நான் விரும்பவில்லை. அந்த மனிதர் நேர்மையானவர் என்பதைப் பின்னரே

உணர்ந்தேன். மிகவும் சாந்தமாக என்னைப் பார்த்துப் பேசினார்.

"நீ மறியலுக்குச் சென்றவள் என அறிந்தேன். நான் என்ன செய்ய? என்னிடம் வளருகின்ற பெண்கள் இருக்கின்றார்கள். உன்னை இவ்விடம் வைத்திருக்க முடியாது. பாவம். வாழ்விலே ஒருமுறை இடறி விழுந்தவர்களுக்கு இவ்வுலகில் தங்க இடமில்லை. இதோ உனக்கு மூன்றுமாதச் சம்பளம். எடுத்துக் கொண்டுபோய் ஏதாவது செய். ஆபத்து ஏற்படும் நேரத்தில் எனக்கு எழுது. நான் ஏதாவது உதவி செய்வேன்," என்றார்.

நான் அவ் வீட்டைவிட்டு வெளியேறினேன். என்னுடைய 28 ஆண்டு வாழ்விலும் இருமுறையே மனிதரிடத்திலிருந்து அன்பைப் பெற்றேன். முதலாவதாக அந்த வெள்ளைக்கார எசமானிடம். பின்னர் இந்த மனிதனிடம்.

வெளியேறிய நான் ஒரு தனியிடத்திலிருந்து அழுதேன். என்னுடைய நிலையை நினைக்க என்மீதே எனக்கு வெறுப்பு வந்தது. ஒரு பிள்ளை எனக்கிருந்தால் அது என்னைத் தேற்றும். பிள்ளை என்றதும் எனக்குக் கோபம் வந்தது. பிள்ளைப் பாசத்தினாலேதான் எனக்கு இந்தத் தொல்லைகள் ஏற்பட்டன. அதனாலேயே வாழ்வெனும் இருட்டில் இடறி விழுந்தேன் இருந்தும் என்ன பயன்? என்னுடைய இலட்சியம் வெற்றிபெறவில்லை. பலரின் பிள்ளைகளைத் தூக்கித் தாலாட்டி வளர்த்த எனக்கு, எனக்கென்று உலகில் ஒரு பிள்ளை இல்லை. மீண்டும் எனக்குப் பாழாய்ப்போன பிள்ளைப் பாசம் வந்தது. உள்ளம் தளம்பியது; அலைகடலெனச் சலனப்பட்டது. என்னை ஆற்றுவாருமில்லை; தேற்றுவாருமில்லை. இந்த நிலையில் அந்த நகரைவிட்டு அதற்கு அடுத்த நகரத்திற்கு ஓடினேன்.

அந்த நகரில் அலைந்து திரியும்போதுதான் முற்றிலும் தெய்வப்பிறவியாகிய திரு. நாகராசன்மேல் மோதுப் பட்டேன். இல்லை. அதிட்டத்தின்மேல் மோதுப் பட்டேன். ஒன்றுமட்டுஞ் சொல்வேன். என்போன்ற வர்களை உருவாக்குவது இந்தப் பாழ்பட்ட சமுதாய அமைப்புத்தான். இந்தச் சமுதாயம் அழியவேண்டும். அது தானாக அழியாது; அழியவிடமாட்டார்கள். அதனை அழிக்கவேண்டும். புதுச் சமுதாயம் மலர வேண்டும். எம்போன்றவர்கள் வாழ இந்த உலகில் இடம் தேவை. அந்தநிலை இன்று இல்லாவிட்டாலும் என்றோ ஒருநாள் வந்தேதீரும்.''

இத்துடன் அவளுடைய வாழ்க்கைக் குறிப்பு முடிவடைந்தது. அதனை வாசிக்க வாசிக்க என் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. என்னுடைய முரட்டு உள்ளமோ இப்படி உருகியது? அக் கடுதாசி களைக் கண்ணில் ஒற்றினேன்.

# இறுதி வேண்டுகோள்

கடுதாசிகளைப் புரட்டும்போது அதற்குள்ளிருந்து ஒரு கடிதம் விழுந்தது; அதுவும் அவளின் எழுத்துத் தான்.

''நான் கடவுளெனப் போற்றும் உத்தமரே!

'முதலாவதாக என்னை மன்னியுங்கள். உங்களை மணஞ்செய்ய நான் தகுதியற்றவள். பொன்னையும் இரும்பையும் வைத்து ஒட்டலாமோ? மல்லிகை மொட்டையும் எலும்புக் கோவையையும் சேர்த்து மாலை கட்டலாமோ? இல்லை, இல்லை.

'இரண்டாவதாக நான் செய்த குற்றம் உங்களையும் கமலநாயகியையும் ஒன்றுசேர்த்தது. அதற்குச் சூழ்ச்சி செய்தேன். படுபாவி நான். அதுவும் உங்கள் மேலுள்ள அன்பிஞலேதான். இப்படி ஒரு பெண்ணை நீங்கள் ஒருபோதும் காணமாட்டீர்கள். நீங்கள் அவளை நேசியுங்கள். அப் பெண் வள்ளுவர் சொன்ன கற்பு நெறியில் எள்ளளவேனும் தவருதவள். அவள்மீது அன்பு பாராட்டி நடப்பது உங்களின் பரிசுத்தமான கடமை; இதிலே தவறவேண்டாம். இறக்கும் என்னுடைய இறுதி வேண்டுகோள் இது. நீங்கள் அன்பு பாரர்ட்டி நடந்தாலே இறந்த என் உயிர் அமைதி

பெறும். என் பிழைக்கும் அப்பொழுது பிராயச்சித்தம் ஏற்படும்.

'நீங்கள் ஆயா வேலையையும் மருத்துவத் தாதி வேலையையும் ஏற்கும்படி கேட்டீர்கள். எனக்குப் பிள்ளை இல்லை...... அது எனக்கு ஒரு விசர்போலாகி விட்டது. பிள்ளைகளைக் கண்டால் தண்ணீரைக் கண்ட விசர்நாய் போலானேன். எனவே நான் பிள்ளைகளைப் பார்க்கும் வேலையை விரும்பவில்லை.

'என்னுடைய புகைப்படமொன்றைக் கமலநாயகியிடம் கொடுத்துள்ளேன். உங்களிடம் தந்தால் கமலம் உங்களைப் பிழையாக விளங்கக்கூடும். எனவே கமலத்திடம் கொடுத்தேன். அப் படத்திற்குக் கண்ணாடி மாட்டிச் சட்டம் போட்டு வையுங்கள்; ஆனால் எப்பொழுதும் அது இரகசியமாக அலமாரியிற் பூட்டி வைத்தபடி இருக்கவேண்டும். நீங்கள் அப் படத்தைச் சுவரிலே தொங்கவிட்டால் உங்களுடைய நண்பர்கள் யாரும் உங்களைப் பார்த்து ஏளனஞ் செய்வார்கள். என்னுடைய கெட்ட பெயர் என்னை அவ்வளவுதூரம் பிரசித்தி செய்துவிட்டது.

'என்னுடைய பணம் சுமார் 3002 ரூபாக்கள் தபாற்கந்தோரில் இருக்கின்றன. அதனை உங்கள் பேருக்கு மரணசாதனமாக எழுதியுள்ளேன். அந்தப் பணத்துடன் நீங்கள் பெருந்தொகையான பணத்தைப் போட்டும் பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டியும் ''அனாதைகள் இல்லம்'' தொடங்குங்கள். என் போன்ற பெண்களுக்குப் புகலிடமாக அது திகழ வேண்டும். உங்களுடைய செல்வாக்கை உபயோகித்து இந்த அரும்பெரும் பணியை உருவாக்குங்கள்.

'என் ஆசை நாயகரே, நான் சாவதற்கு முன்னர் உங்கள் கைகளை என்றாலும் முத்தமிடவேண்டும் எனத் துடிக்கிறேன். ஆனால் அது கமலத்திற்குத்

துரோகஞ் செய்வதாகும். உங்களைக் காணும்போது எப்படி நடக்கின்றேனே யார் அறிவார்? நான் பிழையாக நடப்பேனே தெரியாது. அப்படி நடந்தால் என்னை மன்னியுங்கள்.

'கோடைகாலத்துப் பயிர்கள் வாடி வெதும்பிப் பட்டபின்னர் மழை வந்ததுபோல என் வாழ்வில் உங்களுடைய அன்பும், திரு. வேலுப்பிள்ளையவர்கள் வீட்டாரின் அன்பும் எனக்குக் கிடைத்தன. இவை எனக்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் கிடைத்திருந்தால் என்னுடைய வாழ்வும் தூய்மையாக ஒளிவிட்டுத் திகழும். இதுவெல்லாம் பகற் கனு. அடுத்த பிறப்பிற் பார்ப்போம். திரு. வேலுப்பிள்ளை அவர்களின் வீட்டாருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கின்றேன். என்னைப்பற்றியோ அல்லது என்னுடைய வாழ்வைப் பற்றியோ ஒருவருக்குஞ் சொல்லவேண்டாம்—கமலம் உட்பட—

'இக் கடிதத்தையும் ஏனைய குறிப்புக்களையும் எரித்துச் சாம்பராக்குங்கள். நினைவிற்காகப் புகைப் படம் போதும். ஏதோ பெரிய மனிசிமாதிரி நானும் என்னுடைய புகைப்படத்திலே கையெழுத்துப் போட்டிருக்கின்றேன்.

வணக்கம்.

இப்படிக்கு,
ஏழுபிறப்பும் அன்பை மறவாத
அலிசு என்னும் மீனாட்சி"

079064
13.1.92 ஜி 3223
19.2.9.B233

10 ·10